LIBRARY

12 FEB 2013

# பாதை
PAATHAI
FRANCIAN IMSSIONARY BROTHERS

ஆண்டவருக்கான வழியை
ஆயத்தமாக்குங்கள்
அவருக்கான பாதையைச்
செம்மையாக்குங்கள்
(மத் -3:3)

பாதை 34 | 2012 புரட்டாதி - தை 2013 (நண்பர்களுக்கு மட்டும்) | பயணம் 09



# மனித மாண்பை வெளிப்படுத்த நம்பிக்கை ஆண்டில் ஓர் அழைப்பு

**கிறிஸ்து பிறப்புச் செய்தியின் அடிநாதமாக திகழ்கின்ற நம்பிக்கை எனும் நற்செய்தி அனைத்து மக்களுக்கும் உரிய தாகும். இயேசு எம் ஒவ்வொரு வருக்காகவும் பிறந்தார். அன்னை மரியாள் பெத்தலேகேமில் இடையர்களுக்கு இயேசுவை கையளித்ததுபோல திருச்சபையானவள் முழு மனித குலத்திற்கும் இயேசுவைப் பணிக்காக கொடுக்கிறது.**

**ஆண்டவரினுடைய மீட் பளிக்கும் அருள் மனிதர்களுடைய பல்வேறுபட்ட சூழ் நிலைகளிலே வெளிப்படுத்தப்படுகின்றது.**

**இதனால் மட்டும்தான் தீமையை நன்மையாக்க முடியும். அத்தோடு மனிதருடைய இதயங்களை மாற்றி சமாதானத் தின் தூதுவர்களாக மாற்றமுடியும்.**

மரணத்தின் நிழலிலும் தொடர்ந்து வாழ்ந்த மக்கள் ஆண்டவரினுடைய மீட்பின் அருளைக் காண்பார்களாக. (காண் லூக் 1:79) எங்க ளுடைய நாட்டில் வாழுகின்ற சிறுவர்களாலும் இது ஆவ லோடு எதிர்பார்க்கப்பட்ட ஒளி யாக இருக்கின்றது. இதனால் அவர்களுடைய எதிர்காலம் இன்னுமொரு தடவை நம் பிக்கையினால் நிறைந்திருக் கும்.

எங்கெல்லாம் மனித மாண் பும் மனித உரிமைகளும் மிதிக்கப்பட்டிருக்கிறதோ, எங் கெல்லாம் மனிதனைக் கொல் லும் வன்மமும் மனிதன்மனித னைச் சுரண்டும் நிலையும் அதனால் ஏற்படக்கூடிய ஆபத் துக்களை எண்ணாத நிலையும் இருக்கின்றதோ எங்கெங்கே மாற்றுக்கொள்ளைகளையுடைய குழுக்கள் மத்தியில் சமூக வாழ்க்கை சீரழிகின்றதோ எங்கெல்லாம் வாழ்க்கைக் குரிய அடிப்படைத் தேவை களற்ற நிலை ஏற்படுகின்றதோ, எங்கெல்லாம் வசதி படைத்த முன்னேற்றமடைந்த நாடுகளில் நம்பிக்கையற்ற தன்மையும் எதிர்காலத்தைப் பற்றிய பய மும் ஏற்படுகின்றதோ அங் கெல்லாம் கிறிஸ்துவின் ஒளி பிரகாசித்து உண்மையான சகோதர உணர்விலே ஒவ் வொருவரும் தம் பங்கினை ஆற்ற ஊக்குவிக்கின்றது.

பெத்தலேகிமிற்கு இடை யர்கள் விரைந்து சென்றதைப் போல நாமும் செல்வோம். இறைவன் அருளும் இரக்கமும் நிறைந்த தமத திருமுகத்தை நமக்குக் காட்டியுள்ளார். அவ ருடைய வருகை எமக்கு வீண்போகாதிருக்கட்டும்.

இயேசுவைத் தேடுவோம். ஒவ்வொரு மனித உள்ளத்தி லிருந்தும் துயரத்தையும் பயத்தையும் அகற்றும் அவரது ஒளியால் ஈர்க்கப்படுவோமாக நம்பிக்கையுடன் அவரண்டை செல்வோம். தாழ்ச்சியுடன் அவர் முன் பணிந்து ஆராதிப் போம். எல்லோருக்கும் மகிழ்ச் சிகரமான நத்தார் வாழ்த்துக் கள்.

புனித பிரான்சிஸ் அசீசியின் மறை போதனை சபைச் சகோ தரர்களின் பாதை எனும் செய்தி மடலுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதை எனது தனிப் பெரும் பாக்கியமாக எண்ணு கின்றேன். இலங்கையின் தென்முனையான காலி மறை மாவட்டத்திலிருந்து உங் களுக்கு அமைதியும், மகிழ்ச் சியும் நிறைந்த செய்தியை அறிவிக்கின்றேன். (தீர் 2:11) "ஏனெனில் மனிதர் அனை வருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது.

## மட்டுநகர் குருக்கள்மட புனித பிரான்சீஸ் அசீசியார் ஆலயத் திறப்பு விழா



மட்டுநகர் குருக்கள் மட புனித பிரானசீஸ் அசீசியர் ஆலயம் புனரமைக்கப பட்டு புதிய ஆலயமாக 12.10.2012 அன்று 'மட்டுநகர் ஆயர் மேதகு யோசப பொன்னையா ஆண்டகை அவர்களால் புதிய ஆலயம் அபிசேகம் செய்யப்பட்டது.

புனித பிரான்சீஸ் அசீசி யார் பெயர் கொண்ட ஆலயம் கிழக்கு மாகாணத் தில் குருக்கள்மடத்தில் ஐமபது ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக கப்பட்ட முதல் அசீசியார் நாமம் கொண்ட ஆலயமாக திகழ்கிறது.

இந்துக்கள், கிறிஸ்தவர் கள் நல்லுறவின் சின்னமாக மத ஒற்றிப்பின் மையமாக குருக்கள் மடத்தில் இந்த ஆலய முயற்சிகளில் சகல மதத்த வரும் பங்கேற்று செயற்படுவது இவ் ஆலயத் தின் சமய உற வுக்கு ஓர் எடுத்துக் காட் டாகும்.

புனித ரின் ஆல யம் 50 வருட மாக அப்பகுதி யில் சிற்றால யமாக ஆரம் பித் தது. முதல் பல ரது பங்களிப்புடன் பணிகள் பல முன்னெடுக்கப் பட்டதுடன் பிரான்சீங்கன் மறைபரப்பு சகோதார்களையும் 30 ஆண்டு களுக்கு மேலாக தொடர்ந்து பணி யாற்ற வருவதால் சபையின் பணிகள் மூலம் ஆன்மீக பணிகளில் வளர்ச்சி கண்டு மக்கள் குடியிருப்புக்கான உதவித் திட்டங்களும், மாணவர் களின் ஆன்மீகம், மீள்குடியேற்ற வாசிகளின் கல்வி முயற்சிகளிலும் உயர்ந்து தமது பணித்தளமாக சிறுவர் இல்லமும் அமைத்து செயற் படும் வளர்ச்சிகள் இன்று தொடர ஆலயத்தை அமைத்தவர்களின் தூர நோக்கின் துணைக்கரமாக வளர்வ தும் இந்த ஆலய பணிகளின் முன் னேற்றப்படிகளே.

# பிரான்ஸ்கன் பொதுநிலையினர் சபையின் நூற்றாண்டு விழா



பிரான்ஸ்கன் பொது நிலை யினர் சபையானது 1912 ஆம் ஆண்டு இலங்கையில் ஆரம் பிக்கப்பட்டு இந்த ஆண்டு 2012 ஆம் இல் தமது நூற் றாண்டு விழாவை கடந்த ஆடி மாதம் 14 ஆம் திகதி போலவலானை, நீர் கொழும்பில் அனைத்து பிரான்ஸ்கன் சபையினரும் ஒன்று இணைந்து இறைவனுக்கு நன்றித் திருப்பலியினை ஒப்புக் கொடுத்தனர்.

புனித பிரான்ஸ்சிஸ் அசிசி யார் 1221 ஆம் பொது நிலை யினருக்கு என்று இச்சபையை ஆரம்பித்து வைத்ததை நிரூபிக் கும் முகமாக பிரான்ஸ்கன் பொது நிலையினர் சபையானது உலகெங்கும் பரவி பெரும் விருட்சமாக பிரான்ஸ்கன் அசிசியாவின் பணியை பல் வேறுபட்ட கோணங்களில் ஆற்றி வருகின்றனர். ஒரு கட்டிடத்திற்கு மூலைக்கல் முக் கியமானது என்பதை யாரும் நினைப்ப தில்லை. ஆனால் அந்த மூலைக்கல் இல்லை யேல் கட்டடம் நிலைக்காது.

அதுபோலதான் பிரான்ஸ்கன் பொதுநிலையினர் சபையானது திருச்சபையின் மூலைக்கல்லாக அமைந்திருக்கிறது. அவர்கள் தான் திருச்சபையின் முக்கிய அங்கத்தவர்களாக இருந்து புனிதரின் பணியைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றனர். பொது நிலையினர் சபையில் இருந்து

(தொடர்ச்சி.. 4ம் பக்கம்)




# ஆன்மீகத்தை வலுப்படுத்த நம்பிக்கை வாழ்வை புதுப்பியுங்கள்

எந்தச் சூழலிலும் கிறிஸ்தவ விழுமி யங்கள் வாழ்வாக்க நம்பிக்கை தரும் நற்செய்தி வார்த்தைகள் வாழ்வாக வேண்டும். திருநிலையினரும், பொது நிலையினரும் தமது வாழ்வை புதுப் பிக்க பாப்பரசர் 6 ஆம் பெனடிற் இவ்வாண்டினை நம்பிக்கை ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இன்று எல்லோர் மத்தியிலும் தன் நம்பிக்கை அற்றதாலும், உலக மாயை யில் சிக்கித் தவிப்பதாலும் ஆன் மீக பறறுதிக்கு சவாலான பல்வேறு சம்பவங் கள் எம்முன்னே நடைபெறுகிறது. உலக இச்சைகளின் செல்வாக்கு ஆன்மீகத் தளங்களிலும் ஊடுருவி வருவதால் தனிமனித புகழ்ச்சி, பதவி, பட்டங்கள், பொருள் தேடும் திட்டமிடல்கள் ஆன்மகத்தை அலட்சியப்படுத்துவதால் இறை நம் பிக்கை இழந்து வாழ முற்படுகினறார்கள்.

முன்மாதிரிகளான தலைமைகள் முதல் குடும்பங்கள் வரை ஆன்மீக முன் மாதிரிகளாக இறை நம்பிக்கையை விதைக்கும் நம்பிக்கை வாழ்வைக் கட்டி எழுப்பும் செயல்கள் சிறுவர்கள், முதல் பெரியோர் வரை வாழ்வால் வெளிப்படுத் தும் செயல்களில் நம்பிக்கை ஆண் டினை கட்டியெழுப்ப பாப்பரசர் 6 ம் பெனடிக் திருச்சபைக்கு அழைப்பு விடுக்கிறார்.

அருட்சாதனங்களை பெறுவோரும் வழங்குவோரும் அதன் அர்த்தங்களை இறை நம்பிக்கை வாழ்வை வெறும் சடங்குகளாக நிறைவாக்கி, களியாட்ட மாக்கி விடுவதால் அருட்சாதனங்களின் அருள் தரும் நம்பிக்கை வாழ்வைச் சிந்திக்க, வாழ்வாக்க தவறிவிடுகிறார் கள். அருட்சாதனங்களால் வழங்கப் படும் இறை ஆசீரின் புனிதம் காக்கும் நம்பிக்கை வாழ்வை புதுப்பித்துக் கொள்ள திருமுழுக்கு முதல், நற்கருணை, உறுதிப்பூசுதல், குருத்துவம், திருமணம்,

(தொடர்ச்சி.... 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை பாதையை செப்பனிட வாருங்கள்

# பாதையின் பார்வையில்....

வரலாற்றை மாற்று
வரலாற்றை படை
வரலாற்றை எழுது
இதுவே இக்கால தேவை
இன்று ஆன்மீக தேடல்
துறவுகளும், குடும்ப
உறவுகளும் தனித்தனியாகும்.
உங்கள் வாழ்வால் வெளிப்படும்
எந்த அடையாளம் உண்டு. சடங்குகளும்,
சம்பிரதாயங்களும் திருவிழாக்களும்
கொண்டாட்டங்களும் எந்த
மாற்றத்தை ஏற்படுத்துகிறது.
சாதாரண மனிதர் என்பதைவிட
கிறிஸ்து அவர்கள் என
எதை வைத்து எடைபோடலாம்.
வழிபடுவோர், வசதிபடைத்தோர்
வாழ்வின் வெளிப்பாடுகள்
தனிமனித புகழ்ச்சிக்கும்
தற்காலிக மகிழ்ச்சிகுமாக
முயற்சிகள் முடங்கிவிட்டனவா?
வரலாற்றை திரும்பிப் பாருங்கள்
வாழ்ந்து காட்டியவர்கள் எம்முன்
சாதித்தவை, சந்தித்தவை
சவால்களை சாதகமாக்கி
வென்று சாட்சி சொன்னார்கள்
அவர்கள் பிரமாணிக்க வாழ்வு
அர்ப்பணிப்பான செயல்கள்
ஆழமான அன்மீக தேடல்
தன்னை ஒறுத்து

தாழ்ச்சியின் மாதிரியான
வாழ்வு சாட்சி சொல்லும்
வார்த்தைகள் ஒவ்வொன்றும்
வாழத் தூண்டியது
நற்செய்தி பகிர்வை
வாழ்வாலும் வெளிப்படுத்தினர்
இன்றும் வாழும் வரிசையில்
உங்களிடம் ஒப்படைத்ததை
வழிகாட்டியிதை வாழ்ந்துகாட்டி
புதிய தென்புடன் புதிய சிந்தனைகளுடன்
காலத்துக்கு ஏற்ப காத்திரமானவை
எதிர்நீச்சலுடன் செயற்படவேண்டிய
காலத்தில் வாழ்கிறோம்.
சவால்களை சாதகமாக்கி,
சந்தர்ப்பங்களை நழுவவிடாதீர்
பிறர் செயலை மதிப்பிட்டு
நேரத்தைப் போக்காது
நம் செயலை மாற்றிக் கொள்ள
தனித்திருந்து செபிப்போம்,
தவறுகளை கழைய மன உறுதி பெறுவோம்
நேற்றுவரை நடந்தவை அனுபவமாக
இன்று நடப்பதில் இறை நம்பிக்கை
பலமாக்கி செபிக்க நேரத்தை
ஒதுக்குவோம்.
செபிக்கும் நேரத்தை ஒதுக்குவோம்
செபிக்கும் சூழலை உருவாக்குவோம்
பிறரில் குற்றம் காணாது தம்
குற்றம் கழைதலுக்காய்
மனதுருகி வேண்டுவோம்.

தவறுக்கு மன்னிப்புக் கோருவோம்
தவறுகள் தவறிப் போகட்டும்
தன் நம்பிக்கையோடு மண்டியிடுவோம்
சடங்குகளை சம்பிரதாயங்களை
தியானங்களை, வழிபாடுகளை பயனுள்ளதாக்
எம் பணிகளில் தூய்மை காப்போம்
பணிவிடை பெற அல்ல பணி புரியவே
அர்ப்பணமான
கிறிஸ்தவ சாட்சிய வாழ்வில்
வாழ்வால் வழிகாட்டும்
செயல்களே இன்றைய தேவை
நாடிவரும் பக்தர்கள்
நற்செய்தி அறிவைத் தேடுவோர்
ஆர்வத்தை தூண்டும் தூதுரையில்
மாற்றம் தேவை யதார்த்தம் தேவை
வாழ்வோடு ஒட்டாத
நற்செய்திப் பகிர்வினால்
நாட்டமிழந்து செல்லும் நிலைக்கு
குட்டிக்கதை பிரசாரங்கள்
குளப்பத்தை ஏற்படுத்துகிறது
உலக அரசியலை கூறி
உள்ளூர் வாழ்வை சிதைக்காது
இறை அறிவை தூண்டும்
சந்தர்ப்பத்தை திசை திருப்பாது
நற்செய்தி விழுமியங்களை
உணர்ந்தும் யதார்த்தத்தில்
நாடிவருவோர்க்கு நல்லதை விதைப்போம்
மறைக்கல்வியிலும் மாற்றம் தேவை

கடமைக்கான கற்பித்தல்
பரீட்சைக்கான கற்பித்தலால்
ஆன்மீகத்துக்கான தேடல் அருகி
ஆர்வமில்லாது ஒதுங்கும்
சிறுவர்களை தூண்டுதே
துலங்க வைக்கும் தூதர்களாக
ஆர்வமுடன் வளர ஆர்வலூட்டும்
மறைக்கல்விகளை கண்டறிய
மனப்பாங்கில்
மாற்றமுள்ள மனநிலையை
இறைபணியில் தேடலாக்குவோம்
பக்தி சபைகளின் தேடல்
சுய ஆய்வின்றி
குறுகிய வட்டமாக
ஏது காரணம் எனக் கண்டறிய
தியானங்கள், வழிபாடுகள் சந்திப்புக்கள்
மீள்பார்வை தேவை என உணர்ந்தால்
சமூக முரண்கள் தீரவும்
சமய ஆர்வம் தூண்டவும்
செய்யும் பணிகளில் புதுமைகாணவும்
வாடிக்கை, வேடிக்கை சுற்றுலாக்கள்
சாதித்தவை சந்தித்தவை
புதியதாய் சேர்த்துக்கொண்டவை
எவை என உண்மையை
தேடித்தெரியும் மனநிலை
உருவாக்குவோம்
புதியவானம் புதிய பூமி
புதியவாழ்வு புதிய தென்பை
ஊட்டும் செயல்களில்
புத்தாக்கமுடன் புதிய சக்தி
யுடன் இறைதேடலை ஊட்டி
நற்செய்தியை வாழ்வால் வெளிப்படுத்தும்
முன்மாதிரிகளே இன்றைய தேவை.

# பெரிய இலக்கு நோக்கி நகரும் சின்னக் கால்கள்

30 வருடங்களுக்குப் பின்னர் யாழ் மண்ணின் சார்பில் ஞானேஸ்வரன் அன்ரனிராஜ் தேசிய மட்டப் பாடசாலை உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்துப் பெருமை சேர்த்துள்ளார். மே 19 தொடக்கம் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நேபாளத்தில் நடத்தப்பட்ட தெற்காசிய நாடுகளின் 14 வதிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்குகொண்டு அன்ரனி ராஜ் நாடு திரும்பியுள்ளனர்.

பெற்றோர்களை இழந்த அன்ரனிராஜ் தற்போது பிரான்சிஸ்கன் சபை அருட்சகோதரர்களாலும் அருட்தந்தை ஜேஏ.ஜேசுதாஸ் அவர்களாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றார். தற்போது இளவாலை வளனார் விடுதியில் தங்கியிருந்து கல்வியைத் தொடரும் அன்ரனி ராஜ் தன்னைப் பற்றியும் தனது அனுபவங்கள் பற்றியும் பகிர்ந்து கொண்டார்.

நெடுந்தீவு மாவலித்துறை றோ.க.க. பாடசாலையிலும் தொடர்ந்து ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் கற்று தற்போது 2 வருடங்களுக்கு மேலாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் கல்வி பயின்று வருகின்றேன். சூரிய பிரகாஸ், பிரதீபன் என்னும் இரு சகோதரர்களும் இதே பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர்.

எங்களது 13 வயதிற்குட்பட்ட அணியானது மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் கலந்து கொண்டது. அதிலே தேசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தினரால் என்னையும், எனது நண்பன் சுகந்தனையும் பயிற்சி முகாமிற்கு வரும்படி அழைப்புக் கிடைத்தது. 30 மாணவர்கள் அழைக்கப்பட்டு, அதிலிருந்தே இறுதி 22 பேர் அடங்கிய அணி தேர்வு செய்யப்பட்டிருந்தது. அந்த இறுதி அணியில் நானும் தேர்வு செய்யப்பட்டிருந்தேன் என்று தேசிய அணியில் இடம்பெற்ற நிகழ்வை மீட்டுகின்றார் தேசிய வீரன் அன்ரனிராஜ்.

## நேபாளம் சென்ற அனுபவம்

நேபாளம் சென்ற அனுபவம் பற்றி இவர் மகிழ்வுடன் பகிர்ந்து கொண்டார்.

"எனது வாழ்விலே அது ஒரு மறக்க முடியாத அனுபவமாக என்றும் நிலைத்திருக்கும். பல நாட்டு வீரர்களுடனும் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு எமது அணி 6 போட்டிகளில் விளையாடியது. அதிலே நேபாளத்துடனான போட்டியில் வலது பின்பக்க வீரராகவும், பூட்டான், பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகளுடனான போட்டியில் முன்கள வீரராகவும் களமிறங்கினேன்" என்றார்.



உதைபந்தாட்டத்தில் இவருக்கு ஆர்வம் ஏற்பட புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர்களான சதீஸ், ஞானரூபன், டனிஸ்ரன் விஜயகுமார், மைக்கல் கொலின் ஆகியோருடன் கல்லூரியின் ஏனைய பயிற்றுவிப்பாளர்களும் இவருக்கு தூண்டுதலாக இருந்திருக்கின்றார்கள். எனினும் கல்லூரிக்கென நிரந்தர பயிற்றுவிப்பாளர் இல்லாதது ஒரு குறைபாடாகவே இன்னமும் இருக்கின்றது என்று இவர் ஆதங்கப்படுகின்றார்.

இவருக்கு பக்கபலமாக இருந்துவரும் கல்லூரி பற்றியும், விடுதி பற்றியும் இவர் நன்றியுடன் நினைவு கூறுகின்றார். "நான் ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ்ஸில் சேர்ந்தது தொடக்கம் அருட்தந்தை ஜேஏ.ஜேசுதாஸ் எனக்குப் பக்க பலமாக இருந்து வருகின்றார். என்னைப போன்ற பல மாணவர்களை தனது சொந்தப் பிள்ளைகள் போலவே கவனித்து வருகின்றார். எமக்கு பாடசாலை நேரத்தில் பயிற்சி நடைபெறுவதில்லை. இதனால் கற்றல் செயற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படுவதில்லை. விடுதிச்சாலைப் பொறுப்பாளர் அருட் சகோதரர் மில்றோய் மற்றும் ஆசிரியர்கள், எனது நண்பர்களும் எனக்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்றனர் என்றார்.

"விளையாட்டினால் கல்வி பாதிக்கப்படும் என்ற கருத்துப் பொய்யானது. விளையாட்டினால் உடல் சுறுசுறுப்படையும். மகிழ்ச்சி ஏற்படும். எனவே தனியே படிப்புடன் மட்டும் நின்று விடாமல் விளையாட்டிலும ஆர்வம் செலுத்த வேண்டும்

## ஐப்பான் அனுபவம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் இளவாலை சென்.கென்றியரசர் கல்லூரியில் 9 ஆம் ஆண்டு படிக்கிறேன். பிரான்சீஸ்கன் அருட்சகோதரர்களால் நடாத்தப்படும் இளவாலை சென்.ஜோசப் விடுதியில் இருந்து பாடசாலை சென்று வருகிறேன்.

எங்கள் ஆற்றல் திறன்களை இனம் கண்ட ஊக்கப்படுத்துவதில் சென் கென்றீஸ் அதிபர் யேசுதாசன் அடிகளும் சென் ஜேம்ஸ் மட இயக்குநர் அருட்சகோ மில்றோய் அவர்களும் மாணவர்களை மிக ஆர்வமுடன் வழிகாட்டியதால் நாம் பல வழிகளில் முன்னேறி வருகிறோம்.

இதுவரை எனது கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் முன்னேற எனது பாடசாலையும், சென்ஜோசப் மடத்திலும்



தந்த ஊக்கப்படுத்தலால் யப்பான் நாட்டிறகுச் சென்று திறமைகளை வெளிப்படுத்த பெரும் சந்தர்ப்பமாய் அமைந்தது.

இவை என்வாழ்வின் மாற்றத்துக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமாகக் கருதி இறைவனுக்கு வழிகாட்டிகளுக்கும் என்றும் நன்றி கூறுவேன்.

எனது வாழ்வின் மாற்றத்துக்கு எனது விளையாட்டின் ஆர்வத்தை இனம் கண்டு வழிகாட்டியதால் யாழ். மாவட்டத்திலும், தேசிய மட்டத்திலும் விளையாட சந்தர்ப்பங்களை ஏற்படுத்திய பாடசாலையையம் மாணவர்களின் ஊக்கப்படுத்தலுடன் அதிபர் யேசுதாசன் அடிகள், அருட்சகோதரர் மில்றோய் மற்றும் ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர் பேட்டி போன்றோரின் வழிகாட்டல் யப்பான் நாட்டிலும் கால்பதித்து திறனை வெளிப்படுத்த காரணமாய் இருந்தது.

எமது நாட்டில் இருந்து வெளிநாட்டு பயணத்திற்குத் தெரிவாகப் பல போட்டிகளை எதிர்கொள்ளவேண்டி இருந்து அதனைத்தாண்டி முதல்முறையாக நேபாளம் சென்று விளையாடினேன். அவை புது அனுபவமாக இருந்தது. பல வெளிநாட்டு மாணவர்களின் திறமையை ஆர்வத்தை கண்டு வியந்தேன்.

எமது நாட்டிலும் பல பாடசாலைகளின் மைதானத்திலும் பல போட்டிகளில் சவால்களை எதிர்நோக்கி தேசியமட்டத்தில் தெரிவாவதில் ஊக்கப்படுத்தி தன்னம்பிக்கை ஊட்டிய வழிகாட்டிகளின் வழிகாட்டல் என்னை ஊக்கப்படுத்திய நிகழ்வுகள் மறக்க முடியாதவை.

பாடசாலை நண்பர்கள் என் மீது கொண்ட அக்கறையை உணர்ந்து மெய்மறந்தேன் நேபாளம் சென்று வந்ததும் காட்டி அன்பு உபசரிப்புகள் என்னை ஊக்கப்படுத்தியது.

மீண்டும் தேசிய மட்டப் போட்டிகள் மத்தியில் இலங்கை குழுவில் தெரிவாக பல சவால்களை எதிர்கொண்டபோதெல்லாம் நம்பிக்கை ஊட்டிய வழிகாட்டிகளின் அக்கறை ஆர்வம் தான் நான் யபபான் நாட்டிலும் கால்பதிக்க காரணமானது.

அங்கு சென்றதும் புது உலகை காண்பது போன்றதொரு அனுபவத்தை உணர்ந்தேன். புதிய விடயங்களை கற்றுக்கொண்டேன். எமது நாட்டிலுள்ள யாவரும் பின்பற்றினால் எமது நாட்டிலும் பல வழிகளில் முன்னேற முடியும் என உணர வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# தாழ்ச்சியின் வடிவம்

இன்றைய எம் வாழ்வில் பாவங்கள் பெருகி சண்டைகள், ஒற்றுமையின்மை, பில்லி சூனியம், பாத் தமை, சாமவெறி போன்ற ஊனியல்பின் செயற்பாடுகளே நடைபெறுகின்றன. இவற்றிலிருந்து நாம் விடுதலை வெறுவதற்கு இறைவன் பலரை அழைத்தார்.

அன்னை மரியாள், இயேசுக்கிறிஸ்து இவர்களின் வாழ்வின் இயல்பு நிலை தாழ்ச்சியே. தாழ்ச்சி என்றால் அதனுள் பல நற்பண்புகள் உள்ளவையாகும். தாழ்ச்சி ஒருவரிடத்தில் உள்ளதோ, அவனுள் அன்பு, பக்தி, பரிவு, திறமை உதவும் மனப்பாங்கு என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

அன்னைமரியாள் சிறுவயது தொட்டே நற்பண்பு களைக் கடைப்பிடித்த படியால் இறைவன் தன் திட்டத்தை மரியாள் மூலம் உலகிற்கு கொடுத்தார். மரியன்னையின் நற்பண்புகளைப் பார்க்கும்போது முதல் நற்பண்பு தாழ்ச்சி தான். வானதூதர் மங்கள வார்த்தை கூறும்போது "இதோ உமது அடிமை, உமது வார்த்தையின் படி எனக்கு ஆகட்டும்" என்று கூறினார். அடிமை என்னும் சொல்லி னைக் கேட்டாலே நாம் அந்தஸ்து குறைந்து விடும் என நினைப்போம். ஆனால் மரியாள் தன் வாழ்வை ஒப்படைத்தது மட்டுமன்றி தன்னை தாழ்த்திக் கொள்வ தையும் நாம் காணலாம்.

தாழ்ச்சியை எம் மனதில் ஏற்படுத்த முதலில் அன்பினை வளர்க்க வேண்டும். அன்பு என்பது வெறும் வார்த்தை யல்ல. அர்த்தம் புரிந்து ஒருவர் மீது ஒருவர் புரிந்துணர் வுடன் செயற்பட வேண்டும். ஆடம்பரமற்ற அன்பினால் ஆன அடக்கமான சிக்கனமான வாழ்வின் மூலம் தாழ்ச்சி எனும் நற்பண்பினை கட்டியெழுப்ப முடியும்.

ஏழ்மை, எளிமை இது தான் இயேசுவின் பாடம். பிறந்தது மாட்டுக் குடிசை, மறைந்தது அடுத்தவனுக்குச் சொந்தமான கல்லறை. தனக்கென ஓர் இடத்தில் அவர் பிறககவோ, இறக்கவோ இல்லை. உலகின் எளிமையான வர் "எளிய மனத்தோர் பேறுபெற்றோர்" என்று கூறியவாறு அதனைத் தனது இறுதி மூச்சு வரை வாழ்ந்து காட்டினார். "தந்தையே இத் துன்பக்கலம் என்னை விட்டு அகலுமானால் அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படியல்ல. உம் விருப்பப படி என்று இயேசு எமக்காகத் தன்னைத்தானே தாழ்த்து கின்றார். உயிர் பொகும்போது கூட "எல்லாம் நிறை வேறிற்று" என்றே உயிர்நீத்தார்.

ஒரு விடயத்தில் நாம் தாழ்ச்சியின் பொருட்டு கீழ்ப்படிய லாம். ஆனால் அநீதிக்காக கீழ்ப்படிவதோ, பணத்திற்காக கீழ்ப்படிவதோ தாழ்ச்சியல்ல என நாம் உணர வேண்டும். இவ்விரண்டிற்கும் இயேசு உதாரணமாக இருந்தார். ஜெருசலேம் தேவாலயத்தில் இயேசு "என் தந்தையின் இல்லத்தைக் கள்வர் குகையாக்காதீர்கள்" என்று கூறிக் கோபப்பட்டார். ஆடு, மாடுகளைத் துரத்தினார். தாழ்ச்சி எம்முள இருக்க வேண்டும் ஆனாலும் தவறான விடயத்தில் கோபமும் ஏற்பட வேண்டும்.

எனவே, எம்மிடத்தில் உறைந்து கிடக்கும் இவ்வுலகில் செல்வம் புகழ்தான் எனது எனக்கு என்று சுயநல எண்ணங் களையும், சொற்களையும் அடக்கம் செய்து எளிமை யிலும், ஏழ்மையிலும் இறைவனாம் இயேசுவின் சாயலை ஏற்று வாழ் வோம்.

பெயர்:
அ.சுபிட்சனா
பாடசாலை :
பண்டத்தரிப்பு
ஜசிந்தா
றோ.க.த.க.
பாடசாலை

# கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் வெள்ளிவிழா வாழ்த்துக்கள்

அருட்பெருஞ் சோதியே
ஆண்டவனே: ஐயா!
இருட்திரை விலக்கிட ஓடி வருவாய்:

*அநுபல்லவி*
ஆடவைத்தாய் எம்மைப்
பாடவைத்தாய் ஐயா:
ஓடவைத்தாலும் எங்கள் ஒதுக்கிடம்
நீ... அல்லோ

*சரணம்*
அலை அலையாய் துன்பம்
அடுத்தடுத்தே வந்தாலும்
கலைகளை வாழவைத்தாய்
துணைக்கரம் நீட்டி நின்றாய்
கலைக்கிங்கு விலை ஏது?
உந்தனின் அருள் இன்றி
நிலைத்திடக் கரம் தந்து
நின்று நீ காக்கின்றாய்

கர்வமும் அகந்தையும்
கலைஞனைத் தீண்டாமல்
சர்வமும் கலைக்கென்றே
வாழ்ந்திட அருள்புரிவாய்
கொலைவெறியோடிருக்கும்
கொடியமனங்கள் எல்லாம்
கலைவெறியோடு உந்தன்
பணி தொடர அருள்வாய்

*வெள்ளிவிழாக்காணும் கலை*
*இலக்கிய வட்டம்*
*துள்ளியே வளர்ந்துவர*
*துணை நின்ற தலைவருடன்*
செயலாரும் கலைஞனும்
கடவுளின் தொண்டெனவே
தொடர்ந்து வழிநடத்த
துணை நிற்க வேண்டுமையா....

*(நவாலியூர் நாயகி)*

வெள்ளிவிழாவில் சட்டத்தரணி T.M.அன்ரனிப்பிள்ளை அவர்களும் நவாலியூர் நாயகி அவர்களும் "சமூகத்திலகம்" பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட நிகழ்வையும், பாசையூர் மறைக்கல்வி மாணவரின் நடனத்தையும் காணலாம்.



# தலைமைத்துவமும் பண்புகளும்

வாழ்வு என்பது வாழ்வ தல்ல. அதை எவ்வாறு வாழ்கின றோம் என்பதிலேயே உள்ளது. வாழ்க்கையை ஒவ்வொரு நிமிடமும் வீணாக்குபவன் நரக ரத்தை நெருங்குகின்றான். ஒவ் வொரு நிமிடத்தையும் பயன் படுத்துபவன் சொர்க்கத்தை காண்கின்றான். வாழ்க்கையை வாழ அனுபவம் தேவை. அதில் குடும்பத்தில் தலைவனாக அனுபவம் சமூதாயத்தில் சிறந்த பிரஜைகளின் அனு பவம் என பலதரப்பட்டவை உள்ளன. அதில் மாணவ தலைவனுடைய பண்பு என் பதை 2012.10.13 - 14 ஆம் திகதிகளில் சாட்டியில் நடை பெற்ற மாணவ தலைவர் களுக்கான தலைமைத்துவ பாசறையில் அறிந்து கொண் டேன்.

அதில் நாம் முதலாம் நாள் விளையாட்டில் ஒருவர் கூறா மல் தானே முன்வரல் வேண் டும் என்பதையும் அறிந்து கொண்டோம்.

ஒரு மாணவத் தலைவன் எவ்வாறு நடை, உடை, பாவ னைகளில் இருக்க வேண்டும் என்பதையும் அறிந்து கொண் டேன். 4 குழுவாகப் பிரிந்து கையெழுத்து பிரதிகளை செய்தபோது குழுத்தலைவ னுடன் சேர்ந்து துறைபுரிந் தோம்.

ஆகையால் இப்போட்டி யில் வெற்றி பெற்றோம். இதிலிருந்து தலைவன் என அகங்காரம் கொள்ளாமல் எமக்குமேலே உள்ள தலை வனுடன் இணைந்து எமது காலத்தில் சிறந்தது ஒன்றை கல்லூரிக்காக செய்ய வேண் டும் என்பதையும் ஒரு மாண வனை கண்டிப்பால் வேலை செய்விக்க முடியாது. அவனை அன்பால் செயற் படுத்த முடியும் என்பதை உணர்ந்தேன்.

ஆகையால் இப்பாசறை எனக்கும் என்னுடன் வந்த சக 40 மாணவ தலைவர் களுக்கும் சிறிந்த வழிகாட்டி யாக அமைந்தது.

இதற்குக் காரணம் வள வாளர்களான திரு.ஜோசப் பாலா மற்றும் அருட்பணி யூட்றொபின்சன் அவர்களுக் கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

R.Thubagaran
St. Henry's College,
Iavalai,
Jaffna.

# தாழ்ச்சியின் மாதிரியாக கிறிஸ்து தம் சீடர்களின் பாதங்களைக் கழுவி முன் உதாரணமானார்.



கிறிஸ்து தம் பாதங்களைக் கழுவும் நிகழ்வின் ஊடாக அன்பு, தாழ்மை, தலைமைத் துவம் போன்ற நற்பண்புகளை அறியலாம். அதாவது இயேசு தம் சீடர் மேல் அன்புகூர்ந்தார் இயேசு மனித அவதாரத்தின் வழியாக தம் செயல்கள், சீடர் களின் பாதங்களைக் கழுவுதல் வழியாக தம் சீடர் மட்டில் தம் அன்பை வெளிப்படுத்தியி ருக்கிறார்.

தாழ்மையைப் பார்ப்போமா னால் இயேசு தன்னையே தாழ்த்தி தம் சீடர்களின் கால் களைக் கழுவியுள்ளார். இயேசு தன்னைத் தாழ்த்தி இப் பணி யைச் செய்தார். இதினிமித்தம் சீடர்கள் மத்தியில் கீழ்ப்படிவு, விட்டுக்கொடுப்பு, தலைமைத் துவம் என்பன வளர்கின்றது தம்மைப் போலவே தம் சீடர் களும் அவரைப் போல் தம் மையே தாழ்த்தி மற்றவர்க ளுக்காக வாழ்ந்து அவர்க ளுக்கு ஊழியம் புரிய வேண் டும். அன்பு, தாழ்மை தலை மைத்துவ மிக்கவர்களாக தங் களை மாற்றியமைக்க இயேசு தம் வாழ்வினூடாக வெளிப் படுத்தியுள்ளார்.

அன்று இயேசுவின் இச் செயலை நிராகரித்த பேதுரு வுக்கு ஆண்டவர் கூறியது நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கு இலலை என்றார். உடனே பேதுரு ஆண்டவரே என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையும் கூடக் கழுவ வேண்டும் என்றான். இதனூடாக நாம் விளங்கிக் கொள்வது யாதெனில் எம்மை நாமே விட்டுக் கொடுக்க வேண்டும். பேதுரு முதலில் இயேசு கூற உடனே விட்டுக்கொடுத்தார் அதேபோல் நாமும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து சந்தோஷ மாக வாழ வேண்டும்.

இன்று இத் தேசமதில் வாழும் நாம் அனைவரும் இயேசு காட்டிய வழியில் எம்மை விட் டுக் கொடுத்து அவர் காட்டிய வழியில் நடக்க வேண்டும். ஒவ்வொருவர் மீதும் அன்பு உள்ளவர்களாக மாறவேண்டும். இன்று எம் தேசத்தில் நடக்கும் ஒவ்வொரு அக்கிரமங்களுக்கும் நாம் அனைவருமே பொறுப்பு.

காரணம் ஒருவருக்கொரு வர் அன்பு, விட்டுக்கொடுப்பு, கீழ்ப்படிவு போன்ற நற்பண்பு கள் இல்லாமையே. ஆனால் இயேசு சுவாமிகள் தம்மையே விட்டுக் கொடுத்து கீழ்ப்படிந்து தம் சீடர்களின் பாதங்களைக் கழுவினார்.

பாதங்களைக் கழுவியது மட்டுமல்ல. அவர்களுக்கு நல்ல அறிவுரையையும் கூறியுள்ளார். அதாவது நானே உங்கள் கால் களைக் கழுவினதுண்டானால் நீங்களும் ஒருவருடைய கால் களை ஒருவர் கழுவக் கடவீர் கள். நான் உங்களுக்குச் செய்யும்படி உங்களுக்கு மாதிரி யைக் காண்பித்தேன் என்று கூறியுள்ளார். இதனையே நாம் ஒவ்வொருவரும் பின்பற்று வோமானால் மகிழ்ச்சிகரமான தேசமதில் நாம் ஒவ்வொரு வரும் சந்தோஷமாக வாழ முடியும்.

எனவே நாம் அனைவரும் எமக்காய் மனிதப் பிறவி எடுத்து வந்து எமக்கு நல்வழி காட்டிச் சென்ற இயேசுவின் தாழ்ச்சியின் முன்மாதிரியைக் கடைப்பிடித்து எமக்கு பின் வரும் சந்ததிக்கு நல்லதொரு வழிகாட்டியாக வாழ்ந்து இவ் வுலகை ஜெயிப்போமாக!

ஆக்கம் த.திவாசினி

இறைப[illegible]ங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அசிசியார்?

வீண் பெருமை பாராட்டுபவர் பொன்னில் தாகமுடையவர், எப்போதும் எல்லோர் கண்களிலும் தான் படவேண்டுமென்று விரும்புபவர். சமுதாயத்தின் உச்சிப் படிககே ஏறிவிட வேண்டுமென்று விரும்பு பவர். தனது ஆத்தும ஈடேற்றத்தில் அக் கறையற்ற ஒரு சாதாரண கிறிஸ்தவர். தன் ஆயுள் காலத்தில் ஐஸ்வரியராய் இருப்பதோடு மட்டு மல்ல, ஆனால் தனது மகன் தனது ஐஸ்வரியத்தைக் குறைவு படுத்தாது தனக்குப் பெருமையைத் தேடிக் கொடுக்க வேண்டுமென்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தார்.

எச்சாதியினளாயினும், எவ்வந்தஸ் துடையவளாயினும் மாதுபீக்கா தனது கணவரிலும் பார்க்க உயரிய பண்பு களை உடையவளாயிருந் தாள். இயற்கையின் சாந்தமும், பணிவும், பிறர் அலுவல்களில் அநாவசியமாகத் தலையிடாதிருத்தல், முதலிய நற்பண்பு களைக் கொண்ட வளாயிருந்தாலும் வேண்டும் போது தனது கணவரின் கோபாவேசத்தையும் எதிர்த்து நிற்கும் துணிவுடையவள். நன்மையான எக்கருமத்திற்கும் பக்கத் துணை யாவாள். நற்பண்புகள் ஒவ் வொன்றை யும் அதிசயிக்கத்தக்க விதமாய் அனுசரித்து வந்தவள் தன் மகனு டைய அட்டாதுட்டித்தனத்தை மிகைப் படுத்திக் குறை கூறுபவர்களுக்கு அவர் ஒரு நாள் தேவனுடைய பிள்ளையாக மாறுவார் என்று ஒரு தீர்க்கதரிசியைப் போல் கூறி வருவாள்.

பியேற்றோ பேர்ணடோணே தன் மகனையும் தன் முயற்சியில் ஈடுபடச் செய்வதற்குக் காலம் தாழ்த்தவில்லை. அக்காலத்தில் (இக்காலததிலும் தமிழர் மத்தியில் காணப்படுவது வழக்கம்) ஒருவர் தன் ஐஸ்வரியத்தை, செல்வத்தை, பிறர் அறியச் செய்ய வேண்டுமாயின் அதைப் பளபளப்பான, மென்மை யான பலவர்ணங் கொண்ட உடைகளை உடுத்தி அதைப் பிறர் அறியக் காட்டுவார். மத குருக்களும் இத் தப் பிதத்தில் வீழ்ந்தார்க ளென்றால், அது மிகை யானது. மத குருக்க ளைப் பொறுத்தமட்டில் இதை நிவிர்த்தி செய்ய 1213 இல் ஒரு பாப் பரச கட்டளையைப் பிறப பிக்க வேண்டியதா யிற்று.

ஆகவே, பிரான்சிஸ் கொள்வனவு செய்வோர் அதிகம் விரும்பி நட மாடும் ஒரு புடைவைக் கடையில் விற்பனவு செய்து வந்தார். ஸ்பொலேற்றோ பொளிஞ்ஞோ முதலிய இடங்களில் கூடும் சந்தை களுக்குக் குதிரை மார்க்க மாகச் சென்று வருவார். சில சமயங்களில் புறோவான்ஸ் சம்பேன் முதலிய இடங்களுககும் தம் தந்தை யோடு சென் றிருக்கக்கூடும். பிரான்சை நான் விசேஷ வித மாய் நேசிக்கிறேன் அங்கேயே எனது மீதிக் காலத்தைக் கழித்து, அங்கேயே சாக விரும்புகிறேன். ஏனெனில் அங்கு பரிசுத்தமான வைகளுக்கும், தனிப்பட்ட முறையில் பரிசுத்த தேவதிரவிய அனு மானத்திற் கும் வணக்கமும் மரியாதையும் காட்டப்படுகின்றது என்று அவர் சிறிது காலத்திற்குப் பின் கூறியதி லிருந்து அவருடைய பிரயாணங்கள் புலனா கின்றன.

இவரைப்போல் கவர்ச்சிகரமான ஒரு வியாபாரியை இன்றும் கொள்வனவாளர் காணமுடியாது. பிரான்சிஸ் தனது தொழிலில் மிக விவேகமுடையவராய் இருந்தார். இலாப மீட்டுவதை இவர் மற்றவர் களிலும் திறம்படச் செய்தார். ஆனால் செலவு செய்வதில் அதைவிடக் கூடிய தீவிரம் காட்டி வந்தார்.

**இயற்கையிலே பிரான்சிஸ் தாராள சிந்தையுள்ளவர். ஏராளமாய்த் தானம் செய்தார். வறியோர் மேல் இவர் கொண்டுள்ள அன்பு இவரோடு கூடப் பிறந்த குணம். தேவன் பெயரால் பிச்சை கேட்பவர்களுக்கு ஒருபோதும் மறுப்பதில்லையென்று ஒரு விசேக்ஷ பிரதிக்கினை செய்து கொண்டார். ஒரு முறை மாத்திரம் அதுவும் கொள்வனவு செய்ய வந்த ஒருவரைக் கவனிக்க வேண்டிய காரணத்தால் ஒரு பிச்சைக் காரனை மிரட்டித் துரத்தினார். மறுகணம் அதையிட்டுப் பெரிதும் மனவருத்தப்பட்டார்.**

இயற்கையிலே பிரான்சிஸ் தாராள சிந்தையுள்ளவர். ஏராளமாய்த் தானம் செய்தார். வறியோர் மேல் இவர் கொண்டுள்ள அன்பு இவரோடு கூடப் பிறந்த குணம். தேவன் பெயரால் பிச்சை கேட்பவர்களுக்கு ஒருபோதும் மறுப்பதில்லையென்று ஒரு விசேஷ பிரதிக்கினை செய்து கொண்டார். ஒரு முறை மாத்திரம் அதுவும் கொள்வனவு செய்ய வந்த ஒருவரைக் கவனிக்க வேண்டிய காரணத்தால் ஒரு பிச்சைக் காரனை மிரட்டித் துரத்தினார். மறுகணம் அதையிட்டுப் பெரிதும் மனவருத்தப்பட்டார்.

என்ன ஒரு பிரபுவின் பெயரல் உன் னிடம் யாராவது கடன் கேட்க வந்திருந் தால் நீ அதைக் கொடுப்பதில் எவ்வளவு பெருமிதம் அடைந்திருப் பாய். இருந்தும் இராசாதி இராசன் அனுப்பிய ஒருவனை வெளிக்காட்ட எவ்வளவு துணீவு கொண் டாய்? என்று தனக்குத் தானே கூறிக் கொண்டு அப்பிச்சைக்காரன் பின்னால் விரைந் தோடி அவனுக்குக் கைகொள்ளப் பணம் கொடுத்து, தான் முன் பின் யோசிக்காமல் செய்த அந்தச் சிறு குற்றத்திற்குப் பிராயச்சித்தம் செய் தார்.

தருமம் செய்வதில் மாத்திரம் பிரான் சிஸ் பணத்தைச் செலவு செய்ய வில்லை. இவர் தகப்பனுக்கு நேர் மாறான நோக்குடையவர். தகப்பனை விட புதிர்ப்போக்குடையவர்.

சிக்கனம் என்ன வென்று அறியாதவர். தனது அந்தஸ்துக்கும் மேலான விளையாட்டுக் களி யாட்டங்களிலும், விருந்துபசாரங்க ளிலும், பகட்டான உடைகளை அணிவதிலும்தான் சம்பாதித்த பணம் முழுவதையும், தலைகால் தெரியாமல் செலவு செய்து வந்தார்.

சில சமயங்களில் கோமாளி வேடம் போடுவதற்காகத் தனது பகட்டான உடைகளை அணிவதிலும் தான் சம் பாதித்த பணம் முழுவதையும் தலை கால் தெரியாமல் செலவு செய்து வந்தார். சிலசமயங்களில் கோமாளி வேடம் போடுவதற்காகத் தனது பகட் டான பட்டாடைகளில் சாக்குத் துணி யையும் தைத்துப் போட்டுக் கொள்வார். இரவோ, பகலோ கூட்டாளிகளுடன் ஆடிப்பாடித் தெருத்தெருவாய் திரி வதற்காக அவர்களுடைய சயிக்கிளை கிடைத்தவுடன் தன்னுடைய பாதி அருந்திய உணவையோ, அல்லது தகப் பனாருடைய வியாபாரக் கடையையோ விட்டு விட்டுச் செல்லத் தயாராயிருந்தார். *(தொடரும்...)*

## முன்மாதிரிகை

வாழ்வில் உயர்ந்த மனிதனின் சாதனை
இமயமலை உச்சியைடைவதல்ல - மாறாக
கீழ்நோக்கி வர வேண்டும் - என்பதை
நீதானே கற்றுக் கொண்டாய்

வாழ்வில் ஏறுவது ஏற்றமில்லை - ஆனால்
இறங்குவது நிஜயத்தின் பக்கம்
ஒரு படி இறங்கி வந்தார்
தந்தையின் தவப்புதல்கன் - இயேசு
புண்ணியத்தின் அருள் ஊற்றாம் தாழ்ச்சி
புவியின் உயர்நிலை விருட்சமாம் - தன்னை
புவிக்கு அளித்த பரமனுக்கு ஈடாக
புளிக்காரமாய் கொடுத்த தாழ்ச்சி

செய்து காட்டிய பாடம் - வாழ்க்கையின்
உயர்வுக்கு நாட்டிய அடிக்கல்
தாழ்ச்சி ஊனமாகிவிட்ட உலகில்
தவமிருந்து அன்பனிடம் கற்றுக்கொள்ளுங்கள்

அருட்சகோதரி - சரியானா கில்டா
யாழ். மானிப்பாய் றோ.க.த.க. பாடசாலை

# 150 ஆவது ஆண்டைக் கடந்து செல்லும் திருக்குடும்ப கன்னியர் சபை

திருக்குடும்ப கன்னியர் சபை ஸ்தாப கரின் 150 ஆவது ஆண்டு விழா வெகு விமரிசையாக பல்வேறுபட்ட நிகழ்வு களாக யாழ் நகரில் எழுச்சியுடன் கொண டாடப்பட்டது.

திருக்குடும்ப கன்னியர் மாகாண முதல்வர் அருட்சகோதரி யோண் மத்தாயஸ் தலைமையில் நடைபெற்ற விழாக்கள், காட்சிகள், ஒலிநாடா வெளி யீடுகள், கலை வெளிப்பாடுகள், நூல் வெளியீடுகள் எனப் பல்வேறு மட்டத்திலும் பல தினங்கள் யாழ். நகரில் எழுச்சி விழாவாக கொண்டாடப்பட்டது.

துறவற சபையினர், பொது நிலையினர், பழைய மாணவிகள் சங்கமித்து மீட்டுப்பார்த்த நினைவுகள் வெளிநாடு, உள்நாட்டு திருக்குடும்ப உறவின் சங்கமத்தில் புதிய புதிய கருத்துக்கள் பிறக்க வழி சமைத்தது.

கடந்து வந்த பாதைகள், தாண்டி வந்த தடைகள் மகளிர் எழுச்சிக்கும் கல்வி, ஆன்மீக பண்பாட்டு வளர்ச்சிக்கும் வித்திட்ட பல்லின, பல்நாட்டு அர்ப்பணிப்பாளர்களின் அயராத சேவையின் அறுவடையாக 150 ஆவது ஆண்டை காண முடிந்தது.

இன்றைய பணிகள் செய் வோருக்கு இவை சவால் களாகலாம். அதனைச் சாதனை யாக்கும் இறைவலிமையுட னான சுய புகழ்ச்சி இல்லாத பணிகள் பலமேலும் வலு வடைய, பகிரும் திருச் சபை யாக பொதுநிலையினரும் இணைந்து அன்புக்கரங்கள் ஆதரவுக்கரங்கள், ஆன்மீக, அறிவாலய மேம்பாட்டில் அர்ப்பணிப்போடு முன்னெடுக்க பல பணிகள் காத்திருப்பதை ஏற்று அர்ப் பணிப்போடு முன்னெடுத்து அடுத்த தலை முறைக்கு கையளிக்க வேண் டிய பொறுப்பும் கனமுமாகவே உள்ளது.

### ஆன்மீகத்தை வலுப்படுத்த...

அவஸ்தைபூசுதல், இறுதிப்பயணங்கள் யாவற்றிலும் விசுவாச நம்பிக்கை வாழ்வு புதுப்பிக்கப்படுவதை உணர்தலும் முக்கியமானதாகும்.

கிறிஸ்தவர்களின் நம்பிக்கை வாழ்வு பிறருடன் பகிரும் வார்த்தைகள் முதல் வாழும் சூழலில் தொழில் மையங களிலும், தொண்டு அமைப்புக்களிலும், வழிகாட்டும் தலைமைகளிலும் மிளிர கிறிஸ்தவ சாட்சிய வாழ்வு கட்டி எழுப்புதல் வேண்டும்.

இறை நம்பிக்கை தரும் ஆண்டை வெளிப்படுத்துவதில் சகல மட்டத்திலும் தனிமனிதனாலும் கிறிஸ்தவ விழு மியங் களை உணர்த்தும் செயல்களில் நம்பிக்கை இழந்து வாழ் வைச் சிதைக்கும் எந்தச் செயல்களையும் கண்டும் காணாமல் ஒதுஙகாது உண்மைக்கும் நீதிக்கும் ஏற்ற நம்பிக்கை வாழ்வை சிறுவர் முதல் பெரியோர் வரை இறை விசுவாசத்துடன் வாழ்வில் அனுபவிக்க அர்ப்பணிப்புடன் ஆன்மீக பலத்துடன் செயற்பட அழைக்கிறோம்.

### பிரான்சிஸ்கன் பொதுநிலையி....

நூற்றுக்கணக்கான புனிதர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

பொதுநிலையினரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பித்து இறைவனுக்கு நன்றிகூற யாழ். மாவட்டத்திலிருந்து பொதுநிலையின ரின் ஆன்மீக இயக்குநர் அருட்பணி இராயநாயகம் தலைமையில் 55 பொதுநிலையினரும் பிரான்ஸ்சிஸ்கன் சபை துறவிகளும் பங்குபற்றினர். நன்றித் திருப்பலியினை இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் கார்தினால் மல்கம் றஞ்சித், பொது நிலையினரின் தேசிய ஆன்மீக இயக்குநர் அருட்பணி மாக்பெர்னாண்டோ (TOR) யாழ். ஆன்மீக இயக்குநர் அருட்பணி இராயநாயகம் இணைந்து கூட்டுத் திருப் பலியினை ஒப்புக்கொடுத்தனர்.

இறுதி யில் பிரான்சிஸ்கன் பொது நிலையினர் சபையானது திருச்சபையின் முக்கிய மான சபைகளில் ஒன்றானது. இச் சபையின் நூற்றாண்டு விழாவிற்கு அனைத்துப் பொது நிலையினர் சபை அங்கத்தவர்களையும் திருத்தந்தை 16 ஆவது ஆசீர்வாதப்பர் ஆசீர் வழங்கி அனைவருக்கும் தனது நன்றியையும், ஆசீரும் கிடைக்க வாழ்தது மடல் அனுப்பியதை கர்தினால் மல்கம் றஞ்சித் தேசிய இயக்குநரிடம் கையளிக்கப்பட்டு வாசிக்கப்பட்டது,

**ஆலயத்தில் தொலைபேசியால் தொல்லை செய்யாதீர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்நிலை உணரும் தியான அனுபவம்

செயோன்

"எதைப் படிச்சாலும் மனதில நிற்கு தில்லை, இதாலதான் என் முயற்சிகள் எல்லாம் தடையாய் இருக்கு".

"வழிபாட்டுக்கு என்றாலும் மனம் ஒரு நிலையில் நிற்குதில்லை, எப்படி வழிபடு கிறது எண்டு தெரியுதுமில்லை".

"எல்லாரும் போகினம் எண்டு போறன், எனக்கு ஏதோ சும்மா நேரம் போற மாதிரித்தான் இருக்கு மனதில".

"நான் ஒண்டுல ஈடுபடுகிற போது, வேறு ஒரு விஷயத்தில மனம் அலை யிறத உணருறன்".

"எல்லாம் சந்தேகமாக இருக்கிறதால, எதையும் நம்பமனம் இடம் கொடுக்கு தில்லை".

"குடும்பத்தில ஏதோ சேர்ந்திட்டம், இனி எப்படியாவது வாழ்ந்தா போதும் எண்ட பிடிப்பில்லாத வாழ்க்கை தான்".

அலை பாயும் மனதின் அவலக்குர லாக பலரது மனங்களின் குமுறல் வார்த்தைகள் சில சமயங்களில் எமக்கும் சலிப்பைத் தரலாம்.

உடல் உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் மனநிலைகள் நான்கும் சமநிலை யில் அமைவது மனதை ஒரு நிலைப் படுத்தும் வழிகளாக உள ஆராட்சியாளர் கள் தியான வழிகளை கையாள முனை கிறார்கள். இதன் பயனை அனுபவிப்பது பற்றிய விரிவுரைகள் விளக்க உரைகள், பல நூல்களைப் படிக்கலாம், கேட்கலாம், அதனை எமது வாழ்வில் நடைமுறையில் உணர்ந்துகொள்ள நாமாக முயன்றாலே அனுபவிக்க முடியும். பலனை ஒரு நிலைப்படுத்தலின் வழிமுறை தியானமாகும்.

மாம்பழத்தைச் சுவைத்தவர் அதன் சுவை பற்றிக் கூறுவார். "புளிப்பு - ஆனால் அதில் ஓர் சுவை" என்பார் அதன் இனிப் புத் தன்மைக்கு எதுவும் நிகரில்லை" எனறு நீண்ட விமர்சனத்தைக் கூறும்போது கேட்பவர் வாயில் உமிழ்நீர் சுரக்கும். அதனை உண்டவர் போல் அனுபவத்தை உணர முடியாது. இதுபோலவே எமது செயல்களும் அனுபவிக்க எமது புலன் களை ஒருங்கிணைப்பதில் எமக்கு நாமே ஆசானாக வழிகாட்டியாக, சுவைஞனாக மனதைப் பக்குவப்படுத்துவதற்கு தியான வழி மெல்ல மெல்ல முயன்று முழுமை அடையும் நிலையில் முழுமையான மனநிலை எண்ணங்களாலும் உணர்வுக ளாலும், உடலாலும் அனுபவத்தினை சுவைக்கலாம். இதனைப் பிறர் கூறலாம், ஆனால் நாம்தான் அதனைச் செயற்படுத்த வேண்டும் எனும் மனப்பிடிப்பை ஏற் படுத்துவது தியானமாகும்.

நீங்கள் ஓர் மாணவராக இருந்தால், இந்தத் தியானம் உங்களது நினைவாற்ற லைப் பெருக்கவும் மேலும் திறமையாகக் கற்கவும் உதவி புரியும். பாடத்திட்டங் களை கற்றுக்கொண்டாலும் மன அமைதி சமநிலை இல்லாதவரை அவை மனப் பதிவில் இருக்கப் போவதில்லை. அதனால் மனசமநிலை அடைய தியானம் ஏற்ற வழி...

தியானத்தில் பல வழிமுறைகள் உண்டு. இவை பல சமயங்களிலும் வேறு பட்டு பயிற்றுவித்து கொள்வார்கள் அதனை நாமாக எமக்கு ஏற்ற முறைகளில் புலனை ஒரு நிலைப்படுத்துதல் என்பதுதான் முக்கியமே தவிர, ஒன்றை ஒன்று உயர்வு, தாழ்வு என்பதை தேடுவதை விட எமது உணர்வை, உடலை, ஆன் மாவை, மனநிலையை அமைதியான சூழலில் ஒரு நிலைப்படுத்த முயல்வதே தியானக் குறிக்கோள் ஆகவேண்டும்.

தர்மபதம் இப்படி சொல்கிறது, "நிலத் தைப் போன்று பொறுமையும், வாயில் நிலைப்போன்று உறுதியும், சேறு அற்ற ஆழமான குளத்தின் நீர்போன்று தூய்மையும் உள்ளவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. (95) இவை அமை தியான மனமே அனுபவிக்கும்.

சலனம், சபலம், குளப்பும் சூழலில் நாம் அமைதியாக இருப்பதாக கூறிவிட முடியாது. எம் மனதின் தெளிவான அமைதியான சூழலில் மனதை அலைய விடாது பக்குவப்படுத்துவதற்கு உள்ளும், புறமும் மையப்புள்ளியான ஓர் அடை யாளம், நிலையான பொருளாகவோ பூ, இலை, பழம், குருசு, மெழுகுதிரி எதுவானாலும் வழிபாட்டுப் பொருளாக அன்றி எண்ண அடையாளமாகவோ ஒலி, ஒளி, மூச்சுக்காற்று எதுவாகவும் இருக்கலாம். அதனை உற்று நோக்கி மனதை குவித்தலே முக்கியம்.

எங்கள் வழிபாடுகள் மன அமைதிக்கு வழி தேடுகிறது. எங்கள் எண்ணம் எங்கள் வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. ஆகவே அந்த எண்ணத்தில் நான் எதுக்கும் லாயக்கற்றவன் என்றோ, என் னால் முடியாது என்றோ விரக்திக்குள் முடங்கி விடாதீர்கள். நான் மகிழ்ச்சியாக உடல் நலமாக, பிறருடன் மதிப்புள்ளவ ராக இருக்கிறேன் என என்னை நான் ஏற்று, என்னையே நான் பாராட்டி, எனனை ஊக்கப்படுத்தும்போது எனக்குள் அவ நம்பிக்கையான சிந்தனைகள் என்னை ஆட்கொள்ள முடியாது.

எதிலும் நான் சிறந்தவன், என்னால் முன்னேற முடியும் என்ற தன்னம்பிக்கை பிறருடன் உரையாடும் போதும், அவர் களும் சிறந்த குணமும், திறமையும் உடை யோரே எனப் பாராட்டி ஊக்கப்படுத்திப் பாருங்கள். தவறு உடையோரும், தன் தவற்றை விடச் சிறப்பைக் கூறுபவர் மேல் மதிப்பும், தன்மீது உள்ள நற்பண்பு களை உணர்ந்து தன்னைப்பற்றிய சிறப்பை உணர ஆரம்பிப்பார்கள்.

அவர்களின் சிந்தையில் தமது நிலையை உணரும் சிந்தனைகள் அவர்களை தியா னத்தின் பால் ஈர்க்கும் தன்நம்பிக்கை யூட்டும் வழிகளாக மாறும். அச்சூழலும் அதையான மகிழ்வை வெளிப்படுத்தும்.

உங்களுக்குள்ளே ஆழமாக நுழைந்து பார்க்கவும், உங்களைப் பற்றியும் உலகத் தைப் பற்றியும் ஆழமான விளக்கத்தைப் பெறவும், போலிகளிடம் இருந்து ஒதுங்கி வாழவும் நீங்கள் விரும்பினால் அமைதியான மனம் அவசியமானது அவை பெறவல்ல வழியே தியான வழி.

சிறந்த தியான வழிகாட்டி தன் சூழலையும் சுத்தப்படுத்தி அமைதிப் பூங்காவை உருவாக்கும் சிறந்த வழி காட்டியாக முன்மாதிரியாகிறார். எம்மில் பலர் தன்நிலைபற்றிய தாழ்வுணர்குள் அதிகரிப்பதாலேதான் தமது தோற்றத்தி லும், தமது செய்கையிலும் தவறான சிந்தனைகளை வளர்த்து தன்னை அழித்து, சுயத்தை இழந்து, தரம் கெட்ட செயல்களில் ஈடுபடுகிறார்கள். அவர் களிடம் ஆன்மீக நாட்டம் இராது, சமூக பயம் இராது. அதனால் சமூக முரண் களின் முக்கியமானவர்களாகிறார்கள்.

இதற்கான சூழலில் நல் ஒளி ஏற்றும் வழிகாட்டிகளாகத் தியான வழி காட்டிகள் சமூக மாற்றத்தின் முன்மாதிரி களாகும். ஒவ்வொரு சந்தர்ப்பங்களாலும் உடலுள ஆன்மீக பலமான சமூகம் உரு வாக்க உங்களாலும் முடியும் முயன்று பாருங்கள்.



# பாதை பதில்கள்...

● *நாம் கிறிஸ்தவர்கள் என்பதற்கு என்ன அடையாளம்?*

எஸ்.மேரி - மட்டக்களப்பு

நல்ல கேள்வி கேட்டீர். ஒவ்வொரு வரும் தம்மையும் தமது நிலையில் கிறிஸ்தவ அடையாளத்தையும் அறிய அவரது செயலும், பேச்சும், அவரது பெயரும் வெளிப்படுத்துவது தான் அடையாளம்.

இன்று வெறும் வார்த்தைக் கிறிஸ்த வர்களைத் தேடிக் காணவேண்டி உள்ளது. நற்செய்தியின் தூதுவரே கிறிஸ்தவர். அவர் அதை வெளிப் படுத்துவது அவரது சூழலில் செயலால், உறவாடலால் அவரது பெயர்பட புனித மானவரின் பெயர்கொண்டு இருக்கும் நற்செய்தியை வாழ்வாக்கி வெளிப்படுத் தும் அடையாளங்களில் நீங்கள் கிறிஸ்து அவரா அல்லது பெயரளவிலா நீங்கள் தீர்மானியுங்கள்.

● *இப்போது எல்லாம் சாத்திரம் பார்த்துத்தானே வேதக்காரர் எல்லா விடயத்தையும் செய்கிறார்கள்?*

ஆர்.யஸ்ரீன் - கொழும்புத்துறை

பே, பில்லி சூனியத்தில் நம்பிக்கை வைப்பதுடன், திருமணப் பொருத்தம் பார்ப்பதும், நாள் பார்ப்பதில் தம் அவ விசுவாசத்தைத்தான் வெளிப்படுத்து கிறார்கள். இதற்கு வழிகாட்டுபவர்களும் இறை வார்த்தையை மறுதலித்தலையே செய்வதை உணர்வதில்லை. இதனால் இப்போ வீட்டில் நற்செய்தி நூல்களை விட பில்லி சூனியசாத்திர நூல்கள் தான் அதிகரிக்க தொடங்குகிறது. பாரும் இரு தலைவனுக்கு கீழ் ஒரு பணியாளன் எப்படி முழு மனத்துடன் சீடனாக இருக்க முடியும் என்பதை உணராத அற்ப விசுவாசிகளுக்கு இறை விசுவாசம் கம்மிதான்.

● *அசீசியின் அற்புதங்கள் மூலம் பல புதிய விடயங்களை அறிகிறோம். மேலும் விரிவாக அறிந்து கொள்ள பாதை வழிகாட்டுமா?*

என்.தங்கம் - யாழ்ப்பாணம்.

புனித பிரான்சீஸ் அசீசியின் ஏழ்மை வாழ்வு இன்னும் ஆழமாக கற்றுக் கொள்ள சிறு குழுக் கலந்துரையாடல் களை பெற்றோர் பிள்ளைகள் மட்டில் கொண்டு செல்லும் முயற்சிகளில் ஆசிரியர், பெற்றோர் கவனம் எடுத்தால் நல்லது. ஏன் அசீசி நகர் சென்று வரும் பலரும் அனுபவித்ததைப் பகிர்ந்தால் "பாதை" பத்திரிகை அதற்கு இடம் தரும். விரைவில் விளக்கமாகக் கட்டுரைகள் தரக் காத்திருக்கிறோம்.

● *அசீசி மூன்றாம் சபையினரது முயற்சி கள் அறிந்து மகிழ்கிறோம். இவை கிராம மட்டங்களில் உள்ள வர்கள் சிறு குழுமமாக இணைந்து தமது பணிகளை ஆரம்பிக்கலாம் தானே?*

ம.சாந்தி - வவுனியா

அதனை இச் சபை கொண்டோரிடம் தொடர்புபடுத்துவதால் உங்கள் ஆவலும் பூர்த்தி செய்யப்படும். இதனை அச்சபை சார்ந்தோரும் கவனம் எடுத்தலும் காலத் தின் தேவைதான்.

● கிறிஸ்தவ செய்திகளை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தும் "பாதை" பத்திரிகை எங்கள் பகுதியில் கிடைக்க வழி செய்வீர்களா? உங் கள் பத்திரிகை யில் மாணவர்கள் எழுத சந்தர்ப்பம் கொடுப்பீர்களா?

*எஸ்.தயாளன் - மன்னார்*

எல்லாப் பகுதிக்கும் கிடைக்கவே முயற்சிக்கிறோம். இதில் ஆர்வமுள்ள பலர் தமது சமயப் பணியாக பாதை பத்திரிகையை இன்று வேண்டிப் பகிர்ந்து கொள்வது சிறந்த முன்மாதிரி கையாகும். மாணவர்களுக்கான சிறுவர் முற்றம் என்ற பகுதியும் இருப்பதால் இதில் மாணவர்களை எழுத மறை ஆசிரியர், பெற்றோர்கள், சிறுவர்களை எழுதத் தூண்டுவதால் அவர்களின் ஆற்றல் திறன் வெளிப்படவும் சந்தர்ப்பம் கிடைக்கும் அல்லவா?



சிந்துஜன்
யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி



சி.துசாந்தன்
பண்டத்தரிப்பு ஜசிந்தா பாடசாலை

**Address**

The Editor,
'Pathai'
Franciscan Brothers,
No. 194/ A 1, Convent Rd,
Elala - Ja - Ela
Sri Lanka.

The Editor
Paathai,
St.Joseph Boys Home,
Illavalai.


விலை 10/=
ஆண்டு சந்தா 100/=

M-mail : Paathaicmsf@gmail.com

**நல்ல தலைவர்களே நாட்டுக்குத்தேவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணம் தொடர்கிறது



மனிதனின் பயணம் இவ் வாழ்வுப் பயணமானது மேடு, பள்ளம், தாண்டி உண்மை, நேர்மை, நீதியைத் தேடும் எவரும் சவால்களை கண்டு பின் வாங்குவ தில்லை. சுமைகளே சுகமாக பிறருக்காக தம் வாழ்வை அற்பணிக்கும் இறை பாதைப் பயணம் மிகவுமே இலகுவானது அல்ல.

இவ்விதமாகத்தான் இறைமகனாம் இயேசுக்கிறிஸ்து ஏழைகளின் ரூபமாக மாட்டுத்தொழுவத்தில் பிறந்து மிகவும் ஏழ்மையின் வடிவிலே இப்பூமியிலே ஓர் மனிதனாக வந்து தனது இறைபணியைத் தொடர்ந்தார்.

இவ்விதம் அவர் தன்னை முற்றுமாக தாழ்த்தினார். இவ் உலக மக்களுக்காக தனது திரு இரத்தத்தைச் சிந்தி தனது ஜீவனையே கொடுத்தார். இதை நாம் சற்று சிந்தித்துப் பார்த்தால் தனது இரண்டு கரங்களையும் விரித்து தான் இவளவாக உலகத்திலே அன்பு கூர்ந்தேன் என்பதை செயல் வடிவமாக உலகிற்கு எடுத்துக்காட்டினார். எனினும் கடவுள் அவரை உன்னதங்களிலே அவரை உயர்த்தினார். விண்ணவர் மண்ணவர் யாவரும் வழிபடக்கூடிய மேலானநாமத்தை அவருக்குத் தரித்து அவரை உயர்த்தினார்.

பாருங்கள் ஓர் இறைமகனே இவ்விதமாக அவர் தன்னை முற்றுமாக வெறுமையாக்கி தன்னை தரைமட்டுமாக தன்னை தாழ்த்தினார் என்றால் நாம் எம்மாத்திரம்.

இக் காலமானது எமக்கு பல்வேறு நறபண்புகளைக் கற்பிக்கின்றது. என்றால் அது மிகையாகாது. இக் கற்பித்தல்களை நோக்குமிடத்து, இன்பத்தில் பலர் கூடி மகிழும் எம் சூழலில் பலர் துன்பத்தில் துவளும் போது அருகிலிருப போர் மிகச் சொற்பமே அவர்களின் உடனிருப்பு எத்தனை ஆறுதல் தரும். இவை கூட தவக்காலத்தில் எமக்கு நினைவுபடுத்தும் ஓர் ஆன்மீகத்தின் அடையாளமாகும்.

எம்மிடம் என்ன உண்டு? எதைக் கொடுப்போம், எதைப் பெறுவோம் என்று இலாப நட்ட உறவுக்கப்பால் தன்னையே கொடையாகத் தந்த இறைவனின் சிலுவைப் பயணம் எமக்குக் கற்றுத் தந்த பாடங்களை மீட்டுப் பார்ப்போம். அங்கே உடனிருந்தவர் மிகச் சொற்பமே. பயனடைந்தவர்கள் பலரைக் காணவில்லை எனத் துவண்டு விடாது தூரப்பயணம் தொடர்கிறது. இதுவே சிலுவைப் பயணத்தில் தரிசிக்கும் சாட்சிகள்.

எம் எதிரே பல்வேறு பாரச் சுமைகளுடன் சிறுவர் முதியோர், இளையோர்களின் ஏக்கங்கள் எதிர்கொள்ள சுமக்க முடியாது தள்ளாடும் மக்களுக்கு பொருள், பணம் தேவைகளை விட அன்பைப் பகிர்வோம் இறைவன் எம்மிடம் விட்டுச் சென்ற அன்பை நாமும் இவ்வாறானவர்களுக்குக் கொடுத்து ஆறுதல் சொல்லி துணையாக இருக்க வேண்டும் என்பதை கற்பிக்கின்றது.

இவ்விதமாக இறைவன் தாழ்ச்சியின் மாதிரியாக இவ் உலகிற்கு வந்து விட்டுச் சென்ற அன்பை நாமும் மற்றவர்களுக்குக் கொடுத்து இறைவனின் அன்பில் மற்றவரை வழிநடத்தும்போது எமது ஆன்மீக வாழ்வும் வளம் பெறும்.

*யோ.அ.கம்ரியூஸ்*
*ஊர்.புனி. அந்தோனியார் கல்லூரி*

## மறைக்கல்விக் கண்காட்சி

மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு, மறைக்கல்வி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் யாழ். மறைக்கல்விக் கண்காட்சி ஒன்று 23.09.2012 அன்று புனித பத்திரிசியார் கல்லூரி வளாகத்தில் இடம் பெற்றது.

இவ் மறைக்கல்விக் கண்காட்சியின் முக்கிய நோக்கமாக மறைக்கல்வி மாணவர்களை மறை அறிவில் வளரச் செய்வதும் மறைக்கல்வி ஆண்டின் முக்கியத்துவத்தை உணரச் செய்வதாகவும் இந்தக் கண்காட்சி அமைந்தது.

இக்கண்காட்சியில் மறையாசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பங்கு மக்கள் ஆகியோரின் ஆக்கங்களும், திறமைகளும் வெளிப்பட்டன. அத்தோடு பலரது பாராட்டையும் பெற்றது.

## இதய அஞ்சலி



பிறப்பு 06.01.1939
இறப்பு 04.12.2012

சமாதானத்தின் குரலாக
சமய விழுமியங்களின் அடையாளமாக
நல்லுறவாடலின் முன்மாதிரியாக
நம்முடன் வாழ்ந்து அமரத்துவமடைந்த எம்
கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின்
தலைவர்

**துரை ஆரோக்கியதாசன்**

(இளைப்பாறிய பிரதி அதிபர் பலாலி ஆசிரியர் கலாசாலை)

அவர்களுக்கு
எமது இதய அஞ்சலிகள்

**கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்**
**யாழ்ப்பாணம்**

# திருவிவிலியம்

**பொது முன்னுரை**

திருவிவிலியம் என்பது யூத - கிறிஸ்தவ சமய தொகுப்பு. புனிதமானதாகக் கருதப்படுகி றது. நம்பிக்கை கொண்ட சமூகம் இந்த நூல் இறைத்தூணடல் பெற்றதென்று அதிகாரபூர்வ மாக ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் இது திருத்தொகை நிலை பெறுகிறது.

நம்பிக்கை கொண்ட சமூகத் தின் வேறு எந்த மரபுகளும் இத்தகு அதிகாரபூர்வமான அங் கீகாரத்தைப் பெறுவதில்லை. திருவிவிலியம் தூய ஆவியால் ஏவப்பட்டு திருச்சபையில் ஏற்றுக கொள்ளப்பட்டிருக்கிற 73 நூல் களின் தொகுப்பாகும். திரு விவிலியத்தைப் பின்வரும் கோணங்களிலும் பார்க்க இயலும்.

**மனித வார்த்தைகளில் வந்த இறைவார்த்தை**

கடவுள் வெளிப்படுத்திய வற்றை மனித ஆசிரியர்கள் தங்களுக்குத் தெரிந்த மொழி களில் எழுதி வைத்தார்கள். எனவே, கடவுளும் மனிதர்களும் விவிலியத்தின் ஆசிரியர்களாக இருக்கிறார்கள்.

**இறைவெளிப்பாட்டின் பதிவேடு**

தம்மைக் குறித்தும் தம் மீட்புத் திட்டம் குறித்தும் கடவுள் ஆழ்ந்த உண்மைகளை வெளிப் படுத்தியுள்ளார். மனிதர் தம் சொந்த அறிவினால் மட்டும் புரிந்து கொள்ளலியலாது. எனவே கடவுளே இவற்றை வெளிப்படுத்த வேண்டியிருந்தது. இந்த வெளிப்பாடு பல் வேறு காலகட்டங்களில் இஸ் ரேலின் மூதாதையர் வழியாக வும் இறைவாக்கினர் வழியாக வும் இறுதியில் கடவுளின் ஒரே மகனாகிய இயேசுக்கிறிஸ்து வழியாகவும் நடந்தேறியது. ஒரே மகனாகிய இயேசுக் கிறிஸ்து வழியாகவும் நடந்தேறி யது. (காண் எபி 1-1) அவ்வாறு

**நம்பிக்கையின் எழுத்தோவியம்**

விவிலியமானது கடவுளில் நம்பிக்கை கொண்டோரால் நம்பிக்கை கொண்டோருக்காக எழுதப்பட்டது. கடவுள் இருக்கிறார் என்பதைப் புதிதாகச் சொல்வதற்காக எழுந்ததன்று ஏற்கெனவே நம்பிக்கை கொண டோர் அதில் வேரூன்றுவதற்காக இது எழுதப்பட்டுள்ளது. எனவே திரு விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ளவற்றைப் புரந்து கொள்ள அடிப்படையில் நம்பிக்கை இருப்பது இன்றி யமையாதது. இத்தகு காரணங்களால் இதனை நம்பிக் கையின் எழுத்தோவியம் என்கிறோம்.

வெளிப்படுத்தப்பட்ட உண் மைகள் திருவிவிலியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.



**மீட்பின் வரலாறு**

கடவுள் மனித குலத்தை எவ்வாறு மீட்கிறார் என்பதைச் சொல்வதே விவிலியத்தின் முக்கிய நோக்கமாகும். எனவே இது வரலாற்றையோ நில இயலையோ அறிவியலையோ தரும் நோக்குடன் எழுதப்பட வில்லை.

ஆயினும் வரலாற்றிலும் அறிவியலிலும் இந்நூலில் இல்லை எனக் கூறப்பட்டது. ஆனால் மீட்பின் வரலாறே முக் கியம் என்பதால் விவிலியத்தை மீட்பின் வரலாறு என்கிறோம்.

எஸ். அருள்ராஜ்
ஹற்றன் டிக்கோயா

## ஒரு கணம் வந்து பாருங்கள்

அன்று ஒரு நாள் - அனைத்தையும்
படைத்து விட்டு இவற்றை
ஆளவும் இவற்றை விருத்தி
செய்யவும் வேண்டும் என்ற
உயரிய நோக்கோடு - இறுதியாகப்
படைக்கப்பட்டான் பாவக்கறை
படிந்தவனாக - மனிதன்
என்னும் மாஜாஜாலம்.

இன்று ஒரு நாள் - இல்லவே
இல்லை பல யுகங்களாக
தொடர்ந்து கொண்டே.....
அவன் படைத்த அதே
ஜென்மம் - அவனிற்கே
எதிரான அலகையாக...

அன்று ஒரு நாள்....
இயேசு தனது சீடர்களின்
பாதங்களை நீரால் கழுவினார்
தாழ்ச்சியின் முன் உதாரணமாக...
இன்று ஒரு நாளா?
எத்தனை நாட்களாக,
அவர் அன்று காட்டிய
வழியில் செல்லும் உண்மையான
உள்ளம் எங்குள்ளது
இவ் உலகில்....

மனிதர்களே மனிதர்களின்
இரத்தத்தை ருசி பார்க்கின்ற
கொடுமையான நாட்கள்.
பெண்களின் பெறுமதியான
கற்பை குத்திக் குதறும்
கொடூரமான காமுக நாட்கள்,
காணாமல் போன பட்டியலில்
நீண்டு கொண்டே செல்லும்
நெருப்பு வரிகளின் இரகசிய
உண்மைகள் - எங்கே?
இங்கு இறைவன் படைத்த
உன்னதமான உண்மையான
உயிருள்ள மனிதன்

எங்கே? எங்கே?
எம்மைப் படைத்த
எமக்கு முன்னுதாரணமான
காரண கர்த்தாக்கள்
வாருங்கள் இறைவா!
வந்து தான் - ஒருகணம்
நீங்கள் படைத்த படைப்புக்களின்
நிலையான சாதனைகளை.....

*குணசேகரன் சக்தீனா*
*வேரவில், பூநகரி, கிளிநொச்சி.*

## இதய அஞ்சலி



வண.பிதா
**கீதபொன்கலன் லக்ஸ்மன்**

IHS

12.10.1979 14.11.2012

நம்ப முடியவில்லை நின் பிரிவை
நற் குருவாக நல் வழிகாட்டியாக
பணியாலே பலர்மனம் கவர்ந்து
இளமையின் வேகம் விரைய
இவ்வுலக வாழ்வை முடித்து
இறைவனிடம் சென்றீரோ குருவே
உம் நினைவுகள் இதயத்தில் கனக்க
என்றும் நின் ஆன்மா சாந்திக்காய்
இறைவனிடம் இறைஞ்சுகிறோம்
அஞ்சலிக்கின்றோம் சாந்தி! சாந்தி!!

புனித பிரான்சீஸ்கன் சகோதரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Greetings of Peace and Joy given from the Diocese of Galle



I am uniquely privileged to send a message to the Pathai News Paper which is the work of Congregation of the Missionary Brothers of St. Francis of Assisi (CMSF). I bring you greetings of Peace and Joy from the Diocese of Galle – the Sothern Tip of Sri Lanka.

*"The grace of God our Saviour has appeared to all"* (*Tit* 2:11)

This proclamation of hope – the heart of the Christmas message – is meant *for all* men and women. Jesus was born for everyone, and just as Mary, in Bethlehem, offered him to the shepherds, so on Christmas day the Church presents him to all humanity, so that each person and every human situation may come to know the power of God's saving grace, which alone can transform evil into good, which alone can change human hearts, making them oases of peace.

May the many people who continue to dwell in darkness and the shadow of death (cf. *Lk* 1:79) come to know the power of God's saving grace! This light is awaited especially by the children living in our country, and the children of all countries experiencing troubles, so that their future can once more be filled with hope.

Wherever the dignity and rights of the human person are trampled upon; wherever the selfishness of individuals and groups prevails over the common good; wherever fratricidal hatred and the exploitation of man by man risk being taken for granted; wherever internecine conflicts divide ethnic and social groups and disrupt peaceful coexistence; wherever the basics needed for survival are lacking; wherever an increasingly uncertain future is regarded with apprehension, even in affluent nations: in each of these places may the Light of Christmas shine forth and encourage all people to do their part in a spirit of authentic solidarity. If people look only to their own interests, our world will certainly fall apart.


Let us go, then, brothers and sisters! Let us make haste, like the shepherds on that Bethlehem night. God has come to meet us; he has shown us his face, full of grace and mercy! May his coming to us not be in vain! Let us seek Jesus, let us be drawn to his light which dispels sadness and fear from every human heart. Let us draw near to him with confidence, and bow down in humility to adore him. Merry Christmas to all!

Bishop Raymond Wickramasinghe

YEAR OF FAITH 2012 2013

The Logo is composed of a square, bordered field on wish a boat, symbolizing the Church, is represented. as sailing on a graphically minimal representation of waves.

The main mast of the boat is a cross from which sails are displayed in the form of dynamic signs which compose. the trigram of Christ (IHS) The background to the sails is a sun which, associated with the trigram, refers also to the Eucharist.



Special Features of XIII General Plenary Assembly -2012

# Late Rev.Bro.Hubert, truly a Eucharistic Person, welcomed sister death



As an ardent follower of St. Francis of Assisi, Bro. Hubert welcomed Sister death on November 12, 2012 at 12:00 p.m. at Khera Khurd, one of the places that bears the fruit of his pioneering missio nary vocation.

For Bro. Hubert, the Eucharist was the source and sustenance of his Consecrated Franciscan Life and pioneering missio nary zeal. He participated in the Mass every morning, rain or shine, until six months ago when he was completely confined to his room.

In the Eucharist, he experienced the humility of the incarnation of Jesus, the compassio nate God, the God who took the side of the poor, the God who gave the missionary command ment: "Go all over the wor ld and make disciples of me." Bro. Hubert was truly a Eucharistic person.

On November 12, as he was passing onto eternal life, the Eucharist was be ing celebrated in the cha pel next to his room and he received the body and blood of Jesus as his food and drink for the way to me et his creator face to face.

# "Come build my church that is falling to ruins"



The inner call which echoed in the Church then, was heard by St. Francis of Assisi in a little Church of St. Damiano, in Assisi. He responded to that inner call externally by repairing the very Church from where the Resurrected Lord spoke to him. He repaired this Church in a simple way by collecting stones as he said "one stone one blessing" Later it dawned upon him that Christ had called him for a greater task of building the spiritual edifice that was getting drowned with excessive consumerism.

I am privileged to write this message that this Church dedicated to St. Francis Of Assisi would be the first one that will be blessed after the erection of the New Diocese of Batticoloa. The people who have lived in this place, over the past fifty years have experienced light of Christ. Dif fer ent ev ents, perso nali ties must have influe nced their lives and more specially the lives of the Fra nciscan Bro thers whose life and activity reflecting the life of their founder must have been a stronger influencing force for the people and that has led them to this important mile stone.

Every Church has a strong influence upon the lives of the people. This Church dedicated to St. Francis of Assisi we hope that through it the lives of the people will be renewed, their faith strengthened and hope made firm.

The past 50 years are a period of testing and trying. Let this church always echo the deep sentiments of the man of peace, St. Francis of Assisi who beautifully prayed "Lord make me an instru ment of your peace"

The religious experie nce is the source and summit of life for every human whether one is a Christian, a Hindu or a Muslim. May this experience keep people united in mind and heart, in peace, har mony and brotherhood.

**Rev.Fr.Norbert D'Souza OFM cap. Padre Pio Nivasa, Sri Lanka**



To Celebrate the

**Golden Jubilee**

of my Religious profession in the Congregation of the blessed Sacrament



**Novitiate entrance ceremony:**

Eight postulants entered Novitiate on 18 th March 2012 at Kota Hall, Kotagiri

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ். மறைமாவட்ட பிரான்சீஸ்கன் பொதுநிலையினர் சபையின் ஆன்மீக வழிகாட்டியும், குடும்ப வளநிலையமான அகவொளி இயக்குநரும், உளவியல் விரிவுரையாளருமான அருட்பணி S.J.அராயநாயகம் அடிகளார் பாதைக்கு தந்த செல்வி...**

**கண்டவர் : யோகா**

*பிரான்சிஸ்கன் பொதுநிலையினரது பணிகள் அதன் தூரநோக்கு பற்றி வாசகர்களுக்க கூற விரும்புவது...*

1) புனித பிரான்சிஸ் அசிசி பிரான்சிஸ்கன் பொது நிலையின ரைத் தேர்ந்தெடுத்து அவர்களினூடாக நற்செய்தியைப் பரப்ப முயன்றார். பிரான்சிஸ்கன் • பொதுநிலையினர் அவர்களுக்கென்ற வொரு பணியையும் ஆன்மீக வாழ்வையும் அமைத்திருக்கின்றனர். பொதுநிலையினர் இந்த அழைப்பை ஏற்று புனித் பிரான்சிஸ் அசிசியின் அடிச்சுவட்டை பின்பற்றி மக்களுக்கு சேவை செய்வதை தங்களது கடமையாகவும், பணியாகவும் கொண்டுள்ளனர். பொதுநிலையினரின் இந்தப்பணியானது மிக இலகுவானது. எப்படி பிரான்சிஸ் அசிசியார் ஏழைகள் மட்டில் மிகுந்த கருசணையும் கொண்டிருந்தாரோ அதே மனநிலையுடன் இவர்கள் பணிசெய்ய வேண்டும். போர் முடிந்தகாலகட்டத்தில் இருக்கும் இந்த நேரத்தில் இப்படி இயலாதோர் ஒதுக்கப்பட்டவர்கள், கணவனை இழந்தோர், பிள்ளைகளை இழந்தோர், பெற்றோர்களை இழந்தோர்கள் என பலரகத்தினர் எம்முடன் வாழ்கின்றனர். புனித பிரான்சிஸ்கன் பொது நிலையினரின் பணி மிக அவசியமான ஒன்றாக கருதப்படுகின்றது. எனவே அவர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவது நற்செய்தியின் மதிப்பீடுகளை தாங்களும் வாழ்ந்து மற்றவர்களும் அதை வாழ முன்மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து முன்னெடுத்து செல்ல வேண்டும்.

• *த்ங்கள் பணிகள் குடும்ப வள நிலையமான "அகவொளி"யினால் மக்கள் பயனடையக்கூடிய வழிகளை பகிர முடியுமா?*

2) அகவொளி நிலையத்தின் பணிகள் மக்களை தேவைக்கு ஏற்றபடி அவர்கள் பயனடையக்கூடிய வகையில் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தின் தேவைகளை நிறைவு செய்யும்படியான பணிகளை நாம் முன்னெடுத்து செல்கின்றோம்.

- திருமண ஆயத்தப்பயிற்சி நெறி
- மலரும் மணஉறவு
- குடும்ப குழு, தனிநபர் ஆற்றுப்படுத்தல்
- மாணவருக்கான ஆளுமை, விழுமியக்கல்வி
- குடும்ப நலத்திட்டம்
- திருமணசேவை
- குடிபோதை - திருப்பம்:
- குடும்ப பொது ஆற்றுப்படுத்துனரை பயிற்றுவித்தல்
- குடும்பத்தில் வன்முறை விழிப்புணர்வு
- வுன்முறையற்ற தொடர்பாடல்
- குடும்பத்தில் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கான கருத்தரங்கு
- குடும்ப தினவிழா
- கிறிஸ்தவ குடும்ப இயக்கம்
- ஆற்றுப்படுத்துதலிலும் சமாதான சமூக அபிவிருத்தியும் டிப்ளோமா கற்கைநெறி

• *இன்றைய காலசூழலில் குடும்ப முரண்பாடுகள் அதிகரிப்பதன் காரணம் எவை என கருதுகிறீர்கள்? இதனை ஆன்மீக வழிகாட்டலில் எப்படி தீர்வினைக்காண முடியும் என எண்ணுகிறீர்கள்?*

3. இன்றையகால சூழலில் குடும்ப முரண்பாடுகள் வறுமை, நுகர்வோர் கலாச்சாரம், ஊடகங்கள் (கைபேசி, கணனி, தொலைக்காட்சி, புதினப்பத்திரிகைகள், வானொலி) என்பவற்றினூடாகவும் சரியான புரிந்து கொள்ளல் மனப்பாங்கு இல்லாததாலும் பொறுமை தாங்கிக் கொள்ளும் மனப்பான்மை இன்றைய சமூகத்தில் காணப்படாமையாலும் குடும்ப முரண்பாடுகள் அதிகரித்து காணப்படுகின்றது. ஆன்மீக துறையில் இதற்கு தீர்வு காணவேண்டும் என்றால் ஒருவர் முதலில் தன் வாழ்வை பொறுப்பெடுத்து தனது வாழ்க்கைக்கு எது எது தேவையோ அதை சரியான முறையில் தேர்ந்தெடுத்து நற்செய்தியின் விழுமியங்களுக்கு ஏற்ப வாழ்வதுதான் ஒரே ஒரு வழியாக தென்படுகின்றது. இறைவனுடைய விருப்பத்திற்கு எதிராக செயற்படுகின்ற பொழுது பிரச்சினைகள்தான் விளைகின்றன. எனவே அன்பு அமைதி வேண்டுமென்றால் நாம் எமது சுயநலத்தை தவிர்த்து பிறர்நலம் பேணி வாழ வேண்டும் என இயேசு அழைக்கின்றார்.

• *அகவொளி மூலம் உருவாக்கப்படும் உளநலப் பணியாளர்களால் சமூகமாற்றம் காண என்ன வழி முறையை கையாள்கிறீர்கள்? அதன் பயன்கள் திருப்தி தருகின்றனவா? எப்படி?*

4. தங்களது வாழ்வில் மாற்றத்தை விரும்புகின்றவர்கள் உளநல பணியால் மாற்றமடைகின்றனர். இப்படிப்பட்டவர்களுடைய வாழ்வு முன்னேற்றமடைகின்றது. முன்னேற்றமடையும் போது சமூகமும் மாற்றமடைகின்றது. ஆனால் ஏனோ தானோ என்று இருக்கின்றவர்களின் வாழ்வு அப்படியே இருந்து விடுகின்றது. இதற்காக நாங்கள் சில விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்தி அவர்கள் மத்தியில் சில மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றோம். இருப்பினும் அவர்கள் ஒத்துழைக்காவிட்டால் ஒன்றும் செய்யமுடியாது.

# நம்பிக்கை ஆண்டு 2012 - 2013

நம்பிக்கையின் ஆண்டு மலர்கின்றது நம்பிக்கையே நம் வாழ்வு என்று வாழும் எமக்கு இறை நம்பிக்கை கொண்டு வாழ புதிய ஆண்டு மலர்கின்றது.

ஐப்பசி மாதம 11ம் நாள் 2012 ஆம் ஆண்டில் தொடங்கி நவம்பர் மாதம் 24 ஆம் திகதி 2013 வரையுள்ள காலகட்டத்தை நம்பிக்கை. ஆண்டாக திருத்தந்தை 16 ஆம் பெனடிற் பிரகடனம் செய்துள்ளார்.

நம்பிக்கை என்பது ஒரு கொடை என்று அறிந்து கடவுளோடு கொள்ளும் உறவில் ஆழம் கண்டு அதன் பழி பிறரோடு நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்ளும் அர்ப்பணத்தை உறுதிப்படுத்த உதவும் எனவும் நம்பிக்கை ஆண்டு அருளின் காலமாகவும் அர்ப்பணத்தின் காலமாகவும் அமையும் என்றும், கடவுளிடம் முழு மனதுடன் திரும்பி வந்து அவரில் கொண்டுள்ள நம்பிக்கையை ஆழப்படுத்தும் காலமாக இக்காலம் அமையும் என்று மகிழ்ச்சியுடன் இறைவனின் மீட்புத்திட்டத்தை அறிக்கையிட்டு புத்துலகம் படைக்கும் காலமாக அமைய வேண்டுமென்று திருத்தந்தை தனது மறையுரையில் விபரித்துள்ளார்.

அத்துடன் இவ்வருடம் ஐப்பசித் திங்கள் 11ம் நாள் 2012 இல் 2ம் வத்திக்கான் சங்கம் கூடிய 50 ஆவது ஆண்டு நிறைவு நாள் என்பது சிறப்பு அம்சமாகும்.

பழங்காலத்தில் பயணிகள் கடற்பயணத்தின்போது ஒரு விண்மீன் நோக்கியே (அடையாளம்) கப்பலைச் செலுத்துவர். அதேபோல் எமது கத்தோலிக்க விசுவாசப் பயணம் செய்யும் கத்தோலிக்க திருச்சபை என்னும் கப்பலில் பயணம் செய்யும் எம்மவர்க்கு அடிப்படைத் தேவை அறிந்து யாழ், மட்டு, திருகோணமலை, மன்னார், மறைமாவட்டங்கள் மூன்றும் இணைந்து இவ்வாண்டை மறைக்கல்வி ஆண்டாகப் பிரகடனப் படுத்தி இருப்பது எதிர் நோக்கி இருக்கும் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு எதிர்வரும் விசுவாச ஆண்டை முன்னிட்டும் "எல்லோர்க்கும் மறைக்கல்வி" என்ற தலைப்பில் எமது அடிப்படை கிறிஸ்தவ மறைவாழ்வு மறைக்கல்வியை அடித்தளமாக ஆணிவேராக அமைவது எமது நம்பிக்கையாகும். எனவே கத்தோலிக்க கிறிஸ்தவ நம்பிக்கையை கட்டியெழுப்ப மறை அறிவு அவசியம் அறியத்தரும் நோக்கமாக அமைகிறது.

இன்றைய நவீன அறிவியல், பொருளாதார, தொழில்நட்ப வாழ்வு சூழலில் வானளாவ நாம் உயர்ந்தாலும் "கடவுள் நம்பிக்கையை மட்டும் நாம் இழந்து விடக் கூடாது" என்பது எச்சரிக்கை மணியாக ஒலிக்கிறது. இதனை எமது அன்பிய ஒன்று கூடல்கள், செப வழிபாடுகள், நற்கருணை வழிபாடுகள் எமது விசுவாச வாழ்வின் ஊற்றாக அடிப்படை விசுவாசமாகவும் உள்ளது.'

*"அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார்"* (யோவான் 1:12)அதுமட்டுமல்ல. நம்பிக்கை கொள்ளும் பிற இனத்தாரையும் கடவுள் தமக்கு ஏற்புடையவராக்குவார் என்பதை முன்னறிந்து தான் மறைநூல் "உன் வழியாக மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்" என்னும் நற்செய்தியை விசுவாசத்தின் தந்தையாம் ஆபிரகாமுக்கு முன்னுரைத்துள்ளார் இறைவன்

(கலாத்தியர் 3:8).

எமது விசுவாச வாழ்வு பயணத்துக்கு தீயோன் என்றும் அலையாய் அலைக்கழிக்கப்படும்போது நாம் விழிப்பாக இருந்து நம்பிக்கையில் நிலைத்திருந்து, துணிவுடன் நடந்து வலிமையுடன் செயற்பட்டு அனைத்தையும் அன்போடு செயற்பட வேண்டும் என்கிறார் புனித பவுல். (1 கொரி: 16:13)

இவற்றின்படி வாழ முடியும் என்று வாழ்ந்து காட்டிய இயேசுவின் தாய் மரியாள் நமக்கு வழிகாட்டியாக விண்மீனைப் போல திகழ்கின்றாள் அன்னை மரியாள் காட்டிய தாழ்ச்சியிலும், அயலானை அன்பு செய்வதிலும், அயலாரின் தேவை உணர்ந்து அறிந்து கானாவூர் திருமணத்தில் இறைமகன் இயேசுக கிறிஸ்துவின் தந்தையின் நேரம் வரவில்லை என்று சொன்னபோதிலும் ஒரு சாதாரண பெண்ணாக திருமணவிழாவுக்கு அழைப்புப் பெற்று சென்ற அன்னை மரியாள் இறைத்திட்டத்தையும் அதற்குரிய நேரத்தையும் மாற்றியமைக்க முடிந்தது என்றால் அவளிடம் விளங்கிய ஆழமான இறை நம்பிக்கை மகன் மீது கொண்டுள்ள நம்பிக்கை தண்ணீரை இரசமாக்கிய அற்புதத்தால், 'புதுமையால் நம்பிக்கையின் விசுவாசத்தின் அன்னையாக இன்றும் விளங்குகின்றாள்.

மேலும் எமது வாழ்விலும் கடவுள் ஒருவர் மட்டுமே நாம் தேடும் செல்வமாக இருந்தால் பற்றற்ற (பற்றில்லாத) எளிய வாழ்வு வாழ்ந்தால் மனதில் அமைதியும் மகிழ்ச்சியும் பிறக்கும். மனநிறைவு குடிகொள்ளும் "ஆண்டவரையே நம்பியிரு" அவர் உன்னைக் காப்பார் (நீதிமொழிகள் 21:22) ஏனென்றால் தம் ஒரே மகன் மீது நம்பிககை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16).

நிலைவாழ்வு வாழ்ந்திட நம்பிக்கை ஆண்டு வழிகாட்டட்டும். நம்முடைய வாழ்விலும் வாழும் சமூகத்திலும் நம்பிக்கையை வளர்ப்போம். நம்பிக்கையால் நாமும் வாழ்ந்து ஆணடவர் இயேசுவின் அன்பை அனுபவமாக முழு நம்பிக்கையுடன் அதைப் பகர்ந்து இறையருள் பெற்று இறையாட்சி மயமாக்குவோம்.

சகோ.செ.தொபியாஸ்.Cmsf

## தலவாக்கலை திருக்குடும்ப சகோதரிகளின் 50 வருட தியாகப்பணி

தலவாக்கலைப் பங்கில் திருக்குடும்ப சபைக் கன்னியர்கள் தமது சேவையில் ஐம்பது ஆண்டுகளின் நிறைவைக் காணும் மகிழ்ச்சிகரமான இந்நிகழ்வின்போது, அதே பங்கில் 2008 முதல் 2010 வரை ஓர் இறை ஊழியனாய் பணி செய்த எனது அனுபவத்தில் நான் கண்ட, திருக்குடும்பச் சகோதரிகளின் சேவையின் சிறப்பையும், பண்புகள் சிலவற்றையும் இங்கு பதிக்க விரும்புகின்றேன்.

பற்பல பணிகளில் ஈடுபடும் இவ்வருட்சகோதரிகளுக்கு சிறுவர் பாடசாலைச் சிறார்கள் முதல், வளர்ந்தோர், முதியோர் அனைவருமே நண்பர்களும், சகோதர சகோதரிகளுமாவார்.

தலவாக்கலைத் தோட்டத்தில் கொழுந்தெடுக்கும் ஊழியரும், அலுவலகங்களில் தொழில் பார்க்கும் உத்தியோகத்தர்களும், குடிசை வாழ் மாந்தரும் கல்வீட்டு, மாடிவீட்டு மகான்களும், ஒரு தாய் மக்களாக ஒரே இறைத் தந்தையின் பிள்ளைகளாக அனைவரையும் இச்சகோதரிகள் ஏற்று தமது பணியை ஆற்றினார்கள். உள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும், கற்றவர்களுக்கும், கல்லாதவர்களுக்கும் ஏற்றத்தாழ்வு பாராது இறையரசைப் பரப்பினார்கள். இவர்களின் தன்னலமற்ற 50 வருடத் தியாகப் பணி அளப்பரியது.

அருட்சகோதரர் தோமஸ் பெர்ணான்டோ பொன்விழாவில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org